807

Registered No. M. 2095.

OFFICE OF ... 18 AUG 1926 MADRAS

ஞானோதயம்.

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம் முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர்—V. இராமச்சந்திர நாயுடு. எனங்குடி.
தஞ்சாவூர் ஜில்லா.

தொகுதி 17 } 1926-ஞு ஆகஸ்டு-மீ 11வ. { பகுதி 2.

பொருளடக்கம்.

1. நூதனஸம்ஸாரம் கர்மமேதேயவும்—C. ராமய்யா. ...25
2. திவ்யஞானஸாரம்—A. இராமஸ்வாமி சாஸ்திரிகள் ...33
3. உலகினருக்கு நாமளித்துதவவேண்டிய உபதேசங்கள்:—
P. R. ஸுந்திரராஜய்யர். ...41
4. தேங்காயின் மகிமை—K. S. இராமச்சந்திரய்யர். ...44
5. பஞ்சமஹா யக்ஞம்—V. இராமச்சந்திர நாயுடு. ...46
6. குறிப்புகளும் சமாசாரங்களும் ...47
7. நாரத பக்தி ஸூத்திரங்கள். (தொடர்ச்சி)
—P. S. ராமசுப்பையர். ... 33

சந்தா விபரம்:—
நாடு ரூ 1—0—0. வெளிநாடு ரூ 1—8—0.
தனிப்பிரதி ரூ 0—2—0.

...ாம் ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

NISON
2 ... 17.2
2 ... 606

பத்திராதிபர் விண்ணப்பம்.

நம் தமிழ் ஜில்லாக்களிலுள்ள பிரம்மஞானக்கிளைச் சபைகளின் காரியதரிசிகளும் மற்றுமுள்ள மெம்பர்களும் இப் பத்திரிகையின் அபிவிருத்தியில் கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டு, ஆங்காங்குள்ள பழய சந்தாதாரர்களை, சந்தா அனுப்பி பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளும்படி செய்தும், புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தும் வேண்டிய உதவிகளை அளிப்பார்களென்று நம்புகிறோம். பிரம்மஞான பிரசார விஷயத்தில் அதிக சிரத்தையுள்ள லாட்ஜ் ஆர்கனைஸர்களுக்கும் குரூப் ஸெக்ரெடெரிகளுக்கும் இவ்விஷயத்தை அதிகமாய் எடுத்துரைக்க வேண்டியதில்லை. நம் சந்தா நேயர்களும் இப்பத்திரிகையைப் பரப்பும் விஷயத்தில் வேண்டிய உதவி புரிவார்களென்று பிரார்த்திக்கிறோம்.

இப்பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 11உ வெளியாகி, அன்றையதினமே தபாலில் அனுப்பவேண்டிய நம் நேயர்களுக்கு, நேரில் எனங்குடி தபாலாபீஸில் போடப்படுகின்றபடியால், பத்திரிகை நம் நேயர்களுக்குச் சரிவரச்சேராவிட்டால் அதற்கு நாங்கள் காரணர்களல்லவென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

ஸ்ரீமத் பகவத்கீதை.

கிரந்தசுலோகமும் தமிழ் மொழிபெயர்ப்பும். ஏகமதச்சார்புமின்றி ஸர்வமத சம்மதமாயும் மூலகிரந்தத்தை அனுசரித்ததாயுமுள்ளது. பிர்ம்மவித்தியாமஹாஸபையின் தலைவரான டாக்டர் அன்னிபெஸண்டு அம்மாள் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பை அனுசரித்து, எனங்குடி ஸ்ரீமான் V. இராமச்சந்திர நாயுடு அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. காலிகோ பைண்டுசெய்த பாக்[illegible] ஸைஸ் விலை அணு 9. இன்னும் பிரம்மஞானத் தமிழ்புஸ்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாஸத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சாந்திவிலாச புஸ்தகசாலை,

எடமணல், (சீர்காழி வழி).

18 AUG 1926
MADRAS

ஞானோதயம்.

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம் முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 17	1926-ஞு ஆகஸ்டு-மீ 11௨	பகுதி 2.

உ

தேவாபி மகரிஷி பேரில் தோத்திரம்.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

வெள்ளியம்பலத்தில் நாளும் விளங்கிடும் பெரியாய் போற்றி
வெள்ளறி வுடைய மக்கள் விளங்கறி வுடைய ராக
ஒள்ளுணர் வளிக்கு மேன்மை உடையசற் குருவே போற்றி
தெள்ளறி உடையோர் போற்றும் தேவாபி குருவே போற்றி.
நற்றவ முனிவா போற்றி நலந்தரு நாதா போற்றி
பெற்ற நன்றுயிற் செய்ய பேரளி யுடையா போற்றி
கற்றறி விலங்கி உள்ளக் களிம்பறுத் துணரு வார்க்கு
தெற்றென உணர்த்துந் தெய்வத் தேவாபி குருவே போற்றி.

மா. வே. நெ.

---

*நூதன ஸமாசாரம்.

கர்மமே தெய்வம்.

மனிதன் உலகில் தன் ஸ்திதியைக் குறித்து யோஜிக்க யோஜிக்க, தான் அற்ப சக்தியுள்ளவனாகவும், தன்னைச் சுற்றிலுமுள்ள

* 1926-ம் ஞு ஏப்ரல்மீ 2௳ அடையாற்றில் நடந்த தென்னிந்திய பிரம்மஞானஸபை கூட்டத்தில் ஸ்ரீமான் வி. ஜினராஜதாஸரவர்கள் அளித்த உபன்னியாஸத்தின் ஸங்கிரஹம், தெலுங்கு திவ்யஞான தீபிகையினின்று பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.

2086

உலகம் அபாரமான சக்தியோடு கூடியுள்ளதாகவும், இவ்விதம் தன்னுடைய [illegible]ஹீன ஸ்திதி ஸ்பஷ்டமாகிக்கொண்டே வருகிற தாகவும் [illegible]ணகிருன். ஆதியிலிருந்து, பிரபஞ்சத்தில் வெளிப் [illegible] மதங்கள் எல்லாவற்றினிடத்தும் இந்தத் தாரதம்யத்தை ஸமன்வயப்படுத்தி மனிதனுடைய ஸ்திதிகதிகளை சீர்படுத்துதலே முக்கிய உத்தேசமாகக் காணப்படுகின்றது. பிரபஞ்சத்தில் மதங்கள் எல்லாவற்றையும் விமர்சனை செய்துபார்க்க அவைகள் மூன்று தரகதிகளுள்ளவைகளாய்ப் புலப்படும். அவையாவன:—(1) உலகிற்கு அதீதனும், பிரபுவுமான ஈசுவரனைப் பிரதிபாதிப்பது—துவைதமதங்கள். (2) ஸர்வமும் பிர்ம்ம ஸ்வரூபமேயென பிரதிபாதிப்பது—அத்வைதம். (3) நிரீசுவர மதங்கள்.

இப்பொழுது பிரம்மஞான ஸம்பிரதாயம் இவைகளைவிட விலக்ஷணமாயுள்ள நூதன ஸமாசாரத்தையுடையது, நான்காவது.

மனிதன் தன் சக்திக்கு மீறியுள்ள இந்த உலகில் எவ்விதம் ஸமாளிக்கமுடியுமென்ற விஷயத்தில் இம்மதங்கள் ஒவ்வொன்றும் ஒரு மார்க்கத்தை போதிக்கின்றது.

முதலாவதாயுள்ள துவைத ஸம்பிரதாய மதங்கள் எல்லாவற்றினிடத்தும், மனிதன் ஈசுவரனைப் பிரார்த்தித்தல், ஆராதித்தல், முதலாயுள்ள மார்க்கத்தில் ஈசுவரனைப் பிரஸன்னமுள்ளவராகச் செய்து, தான் கடைத்தேறுதலே உபாயமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

இரண்டாவதாயுள்ள அத்வைத ஸம்பிரதாயத்தில், ஸர்வமும் ஈசுவர ஸ்வரூபமேயென்றும், ஈசுவரனைவிட பின்னமான வஸ்து ஒன்றுமில்லையென்றும் நிரூபிப்பதின் துவாரா, எந்த வஸ்துவைப்பார்க்கினும், அதுவும் ஈசுவரனது வியக்திரூபமென அறிந்து, மனனம் செய்வதின் துவாரா, விசாரணை தியானம் இவைகளால் முடிவில் ஆத்மஸாக்ஷாத்காரத்தை அடையவேண்டுமென்பதாக நிரூபிக்கப்படுகின்றது.

மூன்றாவது நிரீசுவர ஸம்பிரதாயங்கள். இவை ஈசுவரனில்லையென ஸ்தாபிப்பதில்லை. ஈசுவரனுடைய வேலை அவசியமில்லாமலே, மனிதன் ஸ்வப்பிரயத்தனத்தால் தான் கடைத்தேறவேண்டுமென போதிப்பவை, இம்மதங்களில் முக்கியமானவைகள், சாங்கியம், பௌத்தமதம். இம்மார்க்கத்தில் முக்கிய சாதனம், தோஷங்களையும் அசுப வாஸனைகளையும் விலக்கிக்கொள்ளுதலேயாகும். ஸ்வ ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்திற்கு காமாதிகள் பிரதிபந்தங்களானபடியால், உள் சோதனையால் அவ்வித மலங்களைக்கண்டு, பரிசீலித்து, அவைகளை நீக்கிக்கொள்ளுதலே நிர்வாணப் பிராப்தி ஸாதனம்.

ரணவைத்தியன், ரணத்தினின்று அசடுகளைப்போக்கி, சுத்தமாக வைப்பதால், உடம்பிலுள்ள ஜீவ சக்தியே ரணத்தை ஆற்றும் வண்ணம், பூர்வகர்மத்தினுடையவும் அஞ்ஞானத்தினுடையவும் ஸம்மந்தங்களாயுள்ள தடைகளை நிவர்த்தித்துக்கொள்ளுதலே மார்க்கமென இது நிரூபிக்கின்றது.

இக்காலத்தில் பிரம்மஞான ஸம்பிரதாயம் மேற்சொன்ன மூன்றிற்கும் விலக்ஷணமாயுள்ளது. இது உபாஸனை, தியானம், சித்தசுத்தி இவைகளின் பிரயோஜனங்களை அங்கீகரித்தும், இவை யெல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமாய் "ஈசுவர ஸங்கற்ப" த்தைக் கண்டுகொள்ளலும், அந்த சங்கற்பானுஸாரமாய் ஒழுகுவதும் ஸாதனங்களாக நிரூபிக்கின்றது. இந்த ஸம்பிரதாயத்தை யனுசரித்து பகவான் கேவலம் அசலனும் கிரியையற்றவனும் மாத்திரமன்று. நிரந்தரமாய் வேலை செய்துகொண்டிருப்பவர்.

> "ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:, ஸஹஸ்ராக்ஷ ஸஹஸ்ரபாத்". "ஸர்வத: பாணிபாதம் தத் ஸர்வதோக்ஷிசிரோமுகம், ஸர்வத: ஸ்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி".

அதாவது, எங்குபார்க்கினும் சிரங்களும், கண்களும், கைகளும், காதுகளும்......ஸதா பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும், வேலை செய்துகொண்டுமிருப்பவர். வைகுந்தத்திலோ கைலையிலோ நிச்சலமாகவுள்ள தத்துவம் மாத்திரமன்று, ஸதா வேலை செய்துகொண்டிருப்பவர். இது பிரம்மஞான ஸபையார் நூதனமாகப் பிரதிபாதித்த சித்தாந்தமன்று. சதபதப் பிராமணத்தில் சிருஷ்டிக்கிரம அத்யாயத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது:—

1. "[illegible]"

... ...

1926

2. “𑌨𑌾𑌨𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑌸𑍃𑌜𑌨𑍍𑌤”

3. “𑌸𑍋𑌽𑌯𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑌕𑌾𑌮𑌯𑌤 ।
𑌭𑍂𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌂𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯𑍇𑌤𑌿 । 𑌸𑍋𑌽𑌶𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌤𑍍 ।
𑌸 𑌤𑌪𑍋𑌽𑌤𑌪𑍍𑌯𑌤 । 𑌸𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍇𑌪𑌾𑌨𑍋 𑌬𑍍𑌰
𑌹𑍍𑌮𑍈𑌵 𑌪𑍍𑌰𑌥𑌮𑌮𑌸𑍃𑌜𑌤, 𑌤𑍍𑌰𑌯𑍀𑌮𑍇𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 ।
𑌸𑍈𑌵𑌾𑌸𑍍𑌮𑍈 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌽𑌭𑌵𑌤𑍍 ॥”

... ...

9. “𑌸𑍋𑌽𑌪𑍋𑌽𑌸𑍃𑌜𑌤 ।

10. 𑌸𑍋𑌽𑌕𑌾𑌮𑌯𑌤 । 𑌆𑌭𑍍𑌯𑍋𑌽𑌦𑍍𑌭𑍍𑌯𑍋𑌽𑌧𑌿𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯𑍇𑌤𑌿 । 𑌸𑍋𑌽𑌨𑌯𑌾 𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾𑌸𑌹𑌾𑌪𑌃 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿
𑌶𑌤𑍍 । 𑌤𑌤 𑌆𑌣𑍍𑌡𑌂𑌸𑌮𑌵𑌰𑍍𑌤𑌤 ।

... ...

... ...

12. 𑌸𑍋𑌽𑌕𑌾𑌮𑌯𑌤 । 𑌆𑌭𑍍𑌯𑍋𑌽𑌦𑍍𑌭𑍍𑌯𑍋𑌽𑌧𑍀𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌨𑌯𑍇𑌯𑌮𑌿𑌤𑌿 । 𑌤𑌾𑌂𑌸𑌂𑌕𑍍𑌲𑌿𑌶𑍍𑌯𑌾𑌪𑍍𑌸𑍁 𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌧𑍍𑌯𑌤𑍍 । 𑌤𑌸𑍍𑌯𑍈 𑌯𑌃 𑌪𑌰𑌾𑌙𑍍𑌰𑌸𑍋𑌽𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌤𑍍 । 𑌸𑌕𑍂𑌰𑍍𑌮𑍋𑌽𑌭𑌵𑌤𑍍.

... ...

13. 𑌸𑍋𑌽𑌕𑌾𑌮𑌯𑌤 । 𑌭𑍂𑌯 𑌏𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯𑍇𑌤𑌿 ।
𑌸𑍋𑌽𑌶𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌤𑍍𑌸 𑌤𑌪𑍋𑌽𑌤𑌪𑍍𑌯𑌤 । 𑌸𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍇𑌪𑌾𑌨𑌃 𑌫𑍇𑌨𑌮𑌸𑍃𑌜𑌤 । 𑌸𑍋𑌽𑌵𑍇𑌦𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌾 𑌏𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 𑌭𑍂𑌯𑍋 𑌵𑍈 𑌭𑌵𑌤𑌿 । 𑌶𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌾𑌣𑍍𑌯𑍇𑌵𑍇𑌤𑌿 । 𑌸𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍇𑌪𑌾𑌨𑍋 𑌮𑍃𑌦𑌂 𑌶𑍁𑌷𑍍𑌕𑌾𑌪𑌮𑍂𑌷𑌸𑌿𑌕𑌤𑌂 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌮𑌶𑍍𑌮𑌾𑌨𑌮𑌯𑍋 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌮𑍋𑌷𑌧𑌿𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑍍𑌯𑌸𑍃𑌜𑌤 । 𑌤𑍇𑌨𑍇𑌮𑌾𑌂𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌾𑌚𑍍𑌛𑌾𑌦𑌯𑌤𑍍 ॥.

ஆதியில் ஜகத்தில்லை. பிரஜாபதி இச்சித்தார். ஜலம் உண்டாயிற்று. மேலும் இச்சித்தார். நுரையுண்டாயிற்று. பிரஜாபதி இச்சித்துக்கொண்டேயிருந்தார். சேர், மண், கல், கட்டிகள், உலோஹங்கள், தங்கம், ரத்தனங்கள், ஓஷதிகள், செடி விருட்சங்கள், திரியக்ஜந்துக்கள் வரிசையாய் உண்டாயின, இவ்விதம்

பகவான் இடைவிடாமல் வேலை செய்துகொண்டேயிருக்கிறார். பிரம்மஞான ஸபையார் இந்தப் புராதன சித்தாந்தத்தையே மீளவும் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

பூர்வம் உபாஸனையாலும், விசார தியானத்தாலும், சித்த சுத்தியாலும் மனிதன் ஜன்ம ஸாபல்யத்தை அடையவேண்டுமென்பதாக சொல்லப்பட்டுவந்தது. இப்பொழுது ஈசுவர ஸங்கற்பானுஸாரமாய் ஒவ்வொருவரும் தான் செய்யவேண்டியதையும், தன் வேலையையும் அறிந்து, அதை நிறைவேற்றுதலே உபாயமென்பதாக நிரூபிக்கின்றோம். ஸதா தன் ஜீவியத்தையும், தான் செய்யும் வேலையையும் ஈசுவர சங்கற்பானுஸாரமாய் இணக்கிக்கொள்வதே முக்கியம். அதுவும், தான் செய்யக்கூடிய வேலையை பிரயத்தனத்தால் கண்டுகொள்ளவேண்டுமேயொழிய, கிடைத்த வேலையால் திருப்தியடைதலன்று. அதாவது, ஈசுவரேச்சை யெதுவோ அதை அறிவதற்கு மிகவும் யத்தனஞ்செய்து, அவ்விச்சையை நிறைவேற்றுவதில் தன் கார்யத்தில் விழித்துக்கொண்டிருப்பவனாய்ச்செய்தலாம். இவ்விதம் செய்வதால் சுகம் லபித்ததா, லபிக்கவில்லையா? ஜயம் உண்டாயிற்றா, இல்லையா? முதலியவைகள் யோசிக்கத்தகுந்த விஷயங்களன்று. உலக திருஷ்டியால் ஜயம் அபஜயம் இவைகளை யோசிக்கவேண்டிய அவசியமில்லை. ஈசுவர இச்சைக்கு உவப்பா அல்லவா, என்ற ஒன்றே கவனிக்கத்தக்கது. ஈசுவர சங்கற்பத்தை யொட்டியுள்ளதெல்லாம் சுகஸாதனமே இவ்விதம் சுகதுக்கங்களுக்கு புதிய ஸமாதானம் கிரஹிக்கவேண்டும். மின்ஸாரசக்தி ஓடிக்கொண்டிருக்கும் தந்தியின் ஸமீபத்தில் வைக்கப்பட்ட காந்தத் தூண்டியிலுள்ள அணுக்களெல்லாம் ஏகமுகமாய்த் திரும்புமாபோல் ஈசுவர சங்கற்பத்தைக் கண்டவுடனே தனது உபாதிகள் எல்லாவற்றினிடத்தும், ஒவ்வொரு அணுவும், அந்த சங்கற்பானுஸாரமாய் வேலை செய்வதற்கு வலித்தப்படும். ஆனால் வேலைசெய்வதெனின், எவ்விதமாகவோ ஒரு விதமாய்வேலை செய்தலன்று. எத்தொழிலைச்செய்யினும் ஈசுவரனே அத்தொழிலை எவ்விதம் செய்வாரோ அவ்விதம் சுத்தமாயும் பூர்ணமாயும் செய்தலாகும்.

அந்த சங்கற்பானுசாரமாய் வேலைசெய்ய மேற்கொண்டபொழுது, அவ்வேலை நிறைவேறினும் சரியே, பங்கமானாலும் சரியே குறையொன்றுமில்லை. அவரது சங்கற்பத்திற்கு எதிரிடையாய்

இல்லாதிருந்தால் போதும்; மற்றது காலக்கிரமத்தில் ஒழுங்குபடும். எத்தொழிலைச்செய்யினும், சக்திக்குக் குறையாமல் திருப்திகரமாயிருக்கவேண்டும். ஒரு உதாரணம் கொடுக்கிறேன். ஒரு கடிதம் எழுதும்பொழுது அக்கடிதத்தைப் படிப்பவனுடைய கஷ்டத்தை மனதில் வாங்கிவைத்துக்கொண்டு, கருத்தைத் தெளிவாயும் எழுத்து சுலபமாயும் அழகாயுமிருக்கும்படி எழுதவேண்டும். இவ்விதமே ஒவ்வொரு வேலையையும் செய்யவேண்டும். ஒரு கட்டடத்தைக் கட்டுவதில் சுவர்கள் நன்றாயும், மூலைகள் ஸம கோணங்களாயும், தளவரிசை அழகாயும் நிருமிக்கப்படவேண்டும். வேலை செய்பவனின் இப்போதைய ஞானத்திற்குவேண்டிய அளவு, சக்திக்குறைவில்லாமல் சாத்தியப்பட்டமட்டில் நன்றாயிருக்கவேண்டும். அவ்விதமின்றி, அசிரத்தையாலும் சோம்பேறித்தனத்தாலும், லோபத்தாலும், "அடாபுடி" வேலைசெய்யின், அது ஈசுவர சங்கற்பத்திற்கு விரோதமாய் நடந்ததாகும்.

இவ்விஷயம் நமக்கு பூர்த்தியாய் ஸாக்ஷாத்காரமாக வேண்டின், இந்த ஸமாசாரத்தை, இந்த சித்தாந்தத்தை உலகில் விஸ்தாரமாய்ப் பிரசாரஞ்செய்யவேண்டும். பிரம்மஞான ஸபையோர்களான நாம் செய்யவேண்டுவது இதுவே. பகவத்சங்கற்பத்திற்குப் புறம்பான காரியம் ஒன்றும் காணப்படக்கூடாது. தச்சுவேலை செய்பவன் தன் வேலையைக் கொஞ்சமேனும் லோபமில்லாமல், எவ்வளவு சிரேஷ்டமாய்ச் செய்யக்கூடுமோ அவ்வளவு நன்றாய்ச் செய்வானேயாமாயின், அவ்விதம் வேலைசெய்த தச்சன், தத்துவ விசாரணையையும் தியானாதிகளையும் செய்யும் நம்மவர்களைவிட, விசேஷமாய் பகவத் ஸானித்யத்தை அடைகிறானென்பதாக ஸ்பஷ்டமாய்ச் சொல்லத்தகும். தச்சனிடமும் பகவான் வேலைசெய்கிறார். அவ்விதமே ஒவ்வொரு வேலைக்காரனிடத்தும், பகவான் தன் சக்தி ஸாமர்த்திய லாவண்யங்களை வியக்தப்படுத்துவதற்கு யத்தனிக்கிறார். எல்லாவேலைகளும் அவருடைய காரியங்களே. செய்யும் வேலையை அடாபுடியாகச்செய்து, மிக்கவாறும் தியானம் உபாஸனையைச்செய்வதால் பகவத் ஸாக்ஷாத்காரம் உண்டாகமாட்டாதென்றும், வேலையைச் சுத்தமாயும் லக்ஷணமாயும் செய்வதுவே ஸாயுஜ்ய ஸாதனமென்பதும் நமது ஸமாசாம்.

ஆகையால் பிரதி வேலைக்காரனிடமுமுள்ள சக்தி, ஸாமர்த்தியம், யூகம் இவைகளை அபிமானியுங்கள். அவனது சரீரத்தா

லும் ஆயுதத்தாலும் பகவத் சக்தியே வேலைசெய்கின்றது. வேலையெவ்வளவு விசேஷ ரமணீயமாயும், நன்றாயும் செய்யப்பட்டதோ அவ்வளவு விசேஷமாக வேலைக்காரனிடம் ஆத்மசக்தி பிரகாசித்ததாகவாகும். அதாவது அவன் ஸாயுஜ்யத்திற்கு மிகவும் சமீபம். நன்றாய் அமைக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவும் பகவானுடைய லாவண்யத்தை வெளிப்படுத்தும் ஒரு ஆலயமாகும். நாம் செய்யும் வேலையைப் பரிபூரணமாகவும் பரிசுத்தமாகவும் செய்யும்படிக்கு பகவான் உள்ளேயிருந்து தூண்டி எழுப்பிவிடுகிறார். பிரம்மஞான ஸபையோர்களான நாம் இந்த ஸமாசாரத்தை உலகிற்கு அளிக்கத்தகும். வேலையில் மனோவிர்த்தியை மாற்றவேண்டும். ஒவ்வொரு வேலையும் பகவானுடைய காரியமென்பதாக போதிக்கவேண்டும். உதரபோஷணத்திற்காகினும் செய்யப்படும் வேலையெல்லாம் ஈசுவர காரியமேயாகும். இவ்வித மனோவிருத்தியோடு செய்யப்பட்டபொழுது, ஒவ்வொரு வேலையும், ஆத்ம ஸாக்ஷாத்கார ஸாதனமென்ற விஷயத்தை நன்றாய்க் கவனியுங்கள்.

பச்சிமதேசத்தார்கள் இவ்விஷயத்தைக் கிரஹித்தார்கள். பிராசீனர்களுடைய வேதாந்தத்தை அறியாமலே, "கார்லைல்" என்ற ஆங்கில கிரந்தகர்த்தா பின்வருமாறு எழுதினார்:— உனது ஸ்வஸ்வரூபம் உனக்குத்தெரிதல் கஷ்டம். உன் வேலையைத் தெரிந்துகொள். நீ எந்தவேலையை நன்றாய்ச்செய்யக் கடவாயோ அதைத் தெரிந்துகொள். அதுவே உனக்கு மோக்ஷம். தன்வேலையைக் குறிப்பிட்டறிந்தவனுடைய பாக்கியமே பாக்கியம்."

அக்கணமே யதார்த்தமான ஆத்மஞானம் ஜனிக்க ஆரம்பிக்கும். நன்றாய் முடிக்கப்பட்ட வேலையினின்று விசேஷமாய் ஆத்ம பிரகாசம் வீசும். மஹான்களின் வாஸஸ்தானமாகிய இந்த அடையாற்றில், ஒவ்வொருவேலையும் நன்றாயும் சுந்தரமாயும் செய்யப்படின், அவ்விடத்தினின்று, ஆத்மப்பிரகாசம் தடையற்று வெளிப்படும்.

இதுவே நுதனஸமாசாரம். இது அகிலஜனங்க மத தர்மம். அதனிடம், ஸர்வக்ஞத்வம், ஸர்வசக்தி, பரமப்பிரேமை இவைகளைக்காணத்தகும். பரிபூரணமாயும் நன்றாயும் சுந்தரமாயும் முடிக்கப்பட்ட வேலையிடம் ஈசுவரனுடைய லாவண்யமும் பரிபூரணத்வமும் வெளிப்படுகின்றன. ஆலயங்களில் மாத்திரமன்று, நல்ல காவ்யத்தினிடமும், நல்ல சிற்பத்தினிடமும், சித்திரங்களிடத்தும்,

உத்யானவனங்களிடத்தும், பகவத்களை கிரமக் கிரமமாகப் பிரகாசிக்கின்றது. லௌகீக காரியங்களை விட்டு ஆரண்யத்திற்குப் போவதால் கைவல்யம் கிடைப்பதைவிட தன்வேலையைச் சுத்தமாய்ச் செய்வதால் கைவல்யம் விசேஷசமீபமாய் நெருங்கும்.

ஒவ்வொரு வேலையினிடத்தும்பகவத்சக்தியேவெளிப்படுகின்றது. ஒவ்வொரு வேலைக்காரனிடத்தும் பகவானே வேலைசெய்கிறார். மற்றொருவனுக்கு அவன் வேலையை நன்றாய்ச் செய்வதற்குக் கற்றுக்கொடுப்பதால் அவனிடம் ஈசுவரசக்தியை பிரகாசிக்கச் செய்கிறோம். அவனுக்கு முன்னைவிட விசேஷ ஈசுவரஸாக்ஷாத்காரம் அதிகமாகும்.

இந்த வேலை அந்த வேலையென்ற அவசியமில்லை. எல்லா வேலைகளும் பகவானுடைய வேலைகளே. எல்லாம் குருதேவரின் வேலைகளே. அவ்வித மனோபாவத்தோடு செய்யப்படும் வேலையெல்லாம் பாரமார்த்தீகமே. இதுவே உண்மையான ஆத்மநிவேதனம்.

பிரம்மஞானஸமாஜம் அகில ஜனங்கஸமாஜம். அகில மதஸமஷ்டிஸமாஜமன்றோ! பிரம்மஞான சபையார்கள் உலகிற்கு அளிக்கக்கூடிய ஸமாசாரம் “வேலையெல்லாம் பரமபவித்திரம்” என்பதுவே. ஸபையோர்கள் தாங்கள் செய்யும் வேலையெல்லாம் தோஷமற்றவைகளாயும் பூரணமாயும் நன்றாயும் செய்வதால் உலகிற்கு வழிகாட்டிகளாய் ஆகக்கூடும். ஸபையோர்கள் தாங்கள் செய்யும் வேலையில் உலகிற்கு வழிகாட்டிகளாய் ஆதல்வேண்டும்.

‘‘வேலை மிகவும் நன்றாயிருக்கிறது, மிகவும் சுந்திரமாயிருக்கிறது.’’ என்று மெச்சப்படும்பொழுது, அது பிரம்மஞான ஸபையோரால் செய்யப்பட்டதல்லவாவென உலகோர்க்குத் தெரியுமாபோல் இருக்கவேண்டும்.

பிரம்மஞான சங்கத்தோர்களாகிய நாம் அனேக விஷயங்களில் உலகிற்கு வழிக்காட்டியிருக்கின்றோம். “வேலையே பரம பவித்திரம்” எனும் இந்த நூதன சமாசாரத்தையும் கூட அளித்து இதிலும் வழிக்காட்டினவர்களாகக் கடவோமாக.

உங்கள் உங்கள் சரீர வஸ்திராதிகளிலாகட்டும், கிரஹ ஸன்னிவேசங்களிலாகட்டும், நீங்கள் வேலைசெய்யும் கார்யங்களிலாகட்டும், உங்கள் உங்கள் சங்கக்கட்டடங்களிலாகட்டும், நீங்கள் உலகோர்க்கு வழிகாட்டிகளாய் ஆகக்கடவீர்களாக.

C. இராமய்யா.

(19-ம் பக்கத் தொடர்ச்சி.)

𑌮𑍋𑌕𑍍𑌷𑍇𑌹𑌿 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌯𑍈𑌰𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑍈𑌃 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌲𑍋𑌕𑍋𑌤𑍍𑌤𑌰𑌂𑌯𑌚𑍍𑌚𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌯𑌾𑌗𑌶𑍍𑌚𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 ॥
𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌕𑍇𑌮𑍋𑌕𑍍𑌷𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑍋𑌜𑌨𑌾𑌃 ।
𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂𑌤𑌥𑍈𑌵𑌾𑌨𑍍𑌯𑍇𑌯𑌤𑌯𑌃𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ॥
𑌪𑍍𑌰𑌹𑌾𑌯𑍋𑌭𑌯𑌮𑌪𑍍𑌯𑍇𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌕𑌰𑍍𑌮𑌚𑌕𑍇𑌵𑌲𑌮𑍍 ।
𑌤𑍃𑌤𑍀𑌯𑍇𑌯𑌂𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌤𑍇𑌨𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥
𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌾𑌦𑌿𑌷𑍁𑌯𑌦𑍍𑌯𑌸𑍍𑌤𑌿 𑌮𑍋𑌕𑍍𑌷𑍋𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 ।
𑌛𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌷𑍁𑌕𑌥𑌂𑌨𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌹𑍇𑌤𑍌𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑍇 ॥
𑌦𑍋𑌷𑌦𑌰𑍍𑌶𑍀𑌤𑍁𑌗𑌾𑌰𑍍𑌹𑌸𑍍𑌥𑍍𑌯𑍇𑌯𑍋𑌵𑍍𑌰𑌜𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌉𑌤𑍍𑌸𑍃𑌜𑌨𑍍𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌂𑌶𑍍𑌚𑌸𑍋𑌪𑌿𑌸𑌂𑌗𑌾𑌨𑍍𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥
𑌕𑌾𑌷𑌾𑌯𑌧𑌾𑌰𑌣𑌂𑌮𑍌𑌣𑍍𑌡𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌬𑍍𑌧𑌂𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌮𑍍 ।
𑌲𑌿𑌂𑌗𑌾𑌨𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌥𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯𑍇𑌤𑌿𑌮𑍇𑌮𑌤𑌿𑌃 ॥

(𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌪𑌰𑍍𑌵𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑌰𑍍𑌵𑌂 32॥ 𑌶𑍍𑌲𑍋॥38-48.

“மோக்ஷ சாஸ்த்ரங்களைத் தெரிந்த சிலர் ஞாநநிஷ்டைதான் மோக்ஷ ஸாதனமென்றும், அப்படியே ஸூக்ஷ்மதர்சிகளான சில யதிகள், கர்மநிஷ்டைதான் ஸாதனமென்றும் சொல்வார்கள். இந்த கேவல ஞானகர்ம நிஷ்டைகள் இரண்டையும் விட்டு, எனக்கு மூன்றாவது மார்க்கம் அந்த மஹானால் உபதேசிக்கப்பட்டது. த்ரிதண்டம் முதலியவைகளில் மோக்ஷமிருக்கும்பக்ஷத்தில், சத்ராதிகளில் (கொடை முதலானவைகளில்) எப்படி இல்லாமல்போகும்? இரண்டிலும் பரிக்ரஹம் (கைக்கொள்ளுதல்) என்பது ஸமானமான காரணமேயாம். யாராகிலும் க்ருஹஸ்ததர்மத்தில் தோஷமிருக்கிறதென்று எண்ணி இதர ஆச்ரமங்களில் நடப்பார்களோ அவர்கள், ஸங்கரஹிதர்கள் (சேர்க்கை இல்லாதவர்கள்) ஆகமாட்டார்கள். காஷாயத்தைத் தரித்தல், க்ஷௌரம் செய்துகொள்ளுதல், யஞ்ஞோபவீதத்தை விட்டுவிடுதல், கமண்டலம் கையில் கொள்ளுதல் இவைகள் எல்லாம், உத்தம மார்க்கங்களின் சின்னங்களே (குறிகளே) ஒழிய மோக்ஷஹேதுக்கள் அல்ல” வென்று ஜநகர்சொல்லி இருக்கிறார். ஆகையால் நம்மைப்போன்றவர்கள், க்ருஹஸ்தர்களாகவேயிருந்து,

குடும்பத்தின் போஷணாதிகளை நடத்திக்கொண்டு, லௌகிக வ்யவஹாரங்களை விடாமலே, ஞானத்தை ஸாதித்து, அனுஷ்டித்து, கடைசியில் முக்தர்களாகும் உபாயம் எதுவோ அதனை யோசித்துத் தெரிந்துகொள்ளுவதுதான் நாம் செய்யவேண்டியவேலை. முதன் முதலில், அப்படிப்பட்ட ஞானம் எதுவோ தெரிந்துகொள்ளவேண்டும். வேதங்கள், சாஸ்திரங்கள், வேதாந்த க்ரந்தங்கள், இவைகளை எல்லாம் வாசித்து அவைகளிலுள்ள விஷயங்களை, ஒரு அக்ஷரங்கூட குறைந்துபோகாமல் தெரிந்துகொள்வதா? அல்ல. நான்கு வேதங்கள், ஆறு வேதாங்கங்கள், மற்றும் இதர சாஸ்திரங்களும் "அபர" வித்யையேதான் என்று முண்டகோபநிஷத்து சொல்லுகின்றது. "அபர" வித்யை என்றால் கீழ்ப்பட்ட ஞானம். உத்தமமான ஞானமாகிய "பரவித்யை" எப்படிப்பட்டது?

"𑌅𑌥 𑌪𑌰𑌾 𑌯𑌯𑌾 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑍇"

அக்ஷரஸ்வரூபனாகிய பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடையும் மார்க்கமேதான் "பரவித்யை". அப்படிப்பட்ட ப்ரஹ்மஞானமெப்படிப்பட்டது? ஈசாவாஸ்ய உபநிஷத்திலிப்படிச் சொல்லியிருக்கிறது.

𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌆𑌤𑍍𑌮𑍈𑌵𑌾𑌭𑍂𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌃 ।
𑌤𑌤𑍍𑌰 𑌕𑍋 𑌮𑍋𑌹𑌃 𑌕𑌃 𑌶𑍋𑌕𑌃 𑌏𑌕𑌤𑍍𑌵𑌮𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌃 ॥

எவன் ஸர்வ பூதங்களையும், ஆத்மாவிலிருப்பதாகப் பார்ப்பானோ, எந்த ஸ்திதியில் ஸர்வபூதங்களும், ஆத்மஸ்வரூபங்களாகவே அறியப்படுமோ, அப்பொழுது, ஏகத்வத்தைப் பார்ப்பவனுக்கு துக்கமெங்கே? மோஹம் எங்கே? அஞ்ஞானம் எங்கே?

சோக மோகங்களைத் தாண்டிப் பரிபூரண ஞானியாவான். இந்த அர்த்தத்தையேதான், பகவத்கீதா சாஸ்த்ரத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் உபதேசித்திருக்கிறார்.

"𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌯𑍇𑌨𑍈𑌕𑌂 𑌭𑌾𑌵𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍀𑌕𑍍𑌷𑌤𑍇 ।
𑌅𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂 ॥"

(கீதை, அ.-18, சு.-20.)

"𑌯𑌦𑌾 𑌭𑍂𑌤𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑌾𑌵𑌮𑍇𑌕𑌸𑍍𑌥𑌮𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑌤 𑌏𑌵 𑌚 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌤𑌦𑌾 ॥"

(கீதை, அ.-13. சு.-30)

என்னவென்றால், ஸர்வபூதங்களிலும் வேறு வேறாகக் காணப்படுபவைகளிடத்தில், விபாகமில்லாமலே நாசரஹிதமாயுள்ள ஏகத்வஞானம் காணப்படுகிறதோ, அந்த ஞானம் ஸாத்விக ஞானமென அறிந்துகொள்.

எப்பொழுது, பூதங்களிடத்தில் காணப்படும் அநேகத்வமென்பது ஒரு ஆத்மாவினிடத்திலேயே பார்க்கப்படுமோ, ஸகல பூதங்களும் அந்த ஆத்மாவிலிருந்து வெளியானதாக அறிந்துகொள்ளப்படுமோ அப்பொழுதே ஜீவன் ப்ரஹ்மத்தை அடைவான். ஆகையினால், வ்யக்தமான எல்லாபூதங்களிலும் ஒன்றான ஈசுவரன் நிறைந்திருக்கிறானென்றோ, ஜீவர்களனைவரும் ஈசுவராம்சங்களேயானதால் ஓரேதத்வம் எல்லாரிடத்திலும் அபிவ்யக்தமாகிறதென்றோ, இல்லையேல், ஸாமான்ய பாமரஜனங்கள் சொல்வது போல், எல்லாரும் ஈசுவரனுடைய குழந்தைகள் என்று தன்னிடத்திலுள்ள தர்மத்தை எல்லாரிடத்திலும் தான் பார்ப்பதினாலேயோ, வெளிப்புறத்திலிருக்கும் ஸகல பூதங்களும், ஐதரேயப்ராம்ஹணத்தில் சொல்லியவாறு, ஸச்சிதானந்த ஸ்வரூபனான பரமாத்மாவின் ஆவிர்ப்பாவ உபாயிகள்—பரமாத்மாவின் ஆலயங்கள் என்றோ (எப்படிச்சொன்னாலும் சரிதான்) அநேகவிதமான பூதங்களிலும் ஏகத்வத்தையே (ஒன்றையே) பார்ப்பதுதான் யதார்த்தமான ஞானம். அம்மாதிரியான ஞானத்தை அனுஷ்டிப்பதுதான் எந்தவிதத்திலும் முக்தனுடைய லக்ஷணம்.

இந்த ஞானம் ஸாதாரணமாகக் கிடையாது. க்ரந்தங்களிலிருந்தும் மஹநீயர்களான குரு ச்ரேஷ்டர்களிடத்திலிருந்தும், எத்தனை தடவை படித்தாலும், கேட்டாலும், அந்த ஞானம், ஸாதாரணமாக அநுஷ்டானம் செய்வது அஸாத்யமாகிறது. அப்படிப்பட்ட ஞானம் ஸ்வானுபவத்தில் ப்ரத்யக்ஷமாவதற்கு என்ன லோபங்கள், ஆடங்கங்கள் இருக்குமோ அவைகளை அறிந்து, தொலங்கும்படிச் செய்துகொண்டாலொழிய அந்நிலையை மனுஷ்யன் அடைய சக்தனாகமாட்டான்.

அந்த ஆடங்கங்கள் எவை? அவைகளைத் துலங்கச்செய்யும் மார்க்கம் யாது, விசாரிப்போம்.

இதில் முதல்படிகள், கடோபனிஷத்தில் இப்படிச் சொல்லியிருக்கிறது:—

𑌨𑌾𑌵𑌿𑌰𑌤𑍋𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑌾𑌨𑍍𑌨𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑍋𑌨𑌾𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 ।
𑌨𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍋𑌵𑌾𑌪𑌿𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍈𑌨𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥

முதலில் கெட்ட நடத்தையினின்று, ஸத்பிரவர்த்தனைக்குத் திரும்பாமற்போனால், அதாவது, பாபகார்யங்களைவிடாதவனுக்கும், இந்த்ரியங்களையும், மனதையும் இஷ்டப்ரகாரம் போகாமற்படி ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளாதவனுக்கும் சாஸ்திரஞான மெவ்வளவிருந்தபோதிலும் ஆத்மஸ்வரூபானுபவம் உண்டாகாது.

இதே அர்த்தத்தை ஸ்ரீ கௌதம புத்தர் இப்படி போதித்திருக்கிறார். "முதலில் பாபகார்யங்களை விடு. பிறகு லோகத்திற்கு மங்களமுண்டாகும் கார்யங்களை ஊக்கத்துடன் செய்". ஆகையால், முதன்முதல் செய்யவேண்டியது பாப கார்யங்களைச் செய்யாமல் நிறுத்திக்கொள்வது தான். லோகத்தார் பாப கார்யங்களை ஏன் செய்வார்கள்? அந்தக்காரணத்தைத் தெரிந்துகொண்டு அதை விலக்கிக்கொள்ள வேணுமல்லவா? ஏன் பிசகான காரியங்களைச் செய்கிறார்கள் என்று, சிறிதுயோசித்தால் காரணம் நமக்கே ஸ்பஷ்டமாகும். நிஷ்காரணமாக ப்ரயோஜனமொன்றையும் உத்தேசிக்காமல் எவனும் எந்தக்கார்யமும் செய்வது அருமை. இது தவிர தெரிந்தும் கெட்டகார்யம் ஏன் செய்வான்—ஸ்வப்ரயோஜனமும், ஸ்வபாவமும்தான், ஸர்வபாபகார்யங்களுக்கும் மூலகாரணம்.

லோகத்தில் ஜனங்கள், தனக்கு ஸ்வயமாக இஷ்டமில்லாமற்போன போதிலும், நிர்ப்பந்தப்படுத்தப் பட்டவர்கள்போல் பாப கார்யத்தில் ப்ரவர்த்திக்கிறார்களே, அதற்கென்ன காரணம்? என்று அர்ஜுனன் ஸ்ரீ க்ருஷ்ணரைக்கேட்டான்.

𑌅𑌥𑌕𑍇𑌨𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑍋𑌽𑌯𑌂 𑌪𑌾𑌪𑌂𑌚𑌰𑌤𑌿𑌪𑍂𑌰𑍁𑌷𑌃 ।
𑌅𑌨𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌪𑌿𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯 𑌬𑌲𑌾𑌦𑌿𑌵𑌨𑌿𑌯𑍋𑌜𑌿𑌤𑌃 ॥
(கீதை, அ.-3. சு.-36.

அதற்கு க்ருஷ்ணர்சொன்ன பதிலைப் பாருங்கள்.

𑌕𑌾𑌮𑌏𑌷𑌕𑍍𑌰𑍋𑌧𑌏𑌷 𑌰𑌜𑍋𑌗𑍁𑌣𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ।
𑌮𑌹𑌾𑌶𑌨𑍋𑌮𑌹𑌾𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌨𑌮𑌿𑌹𑌵𑍈𑌰𑌿𑌣𑌂 ॥
(கீதை, அ.-3. சு.-37.)

காமம், க்ரோதம், இந்த இரண்டும், ஞானத்திற்கு நித்ய வைரிகள். அப்படி என்றால், ஸ்வலாபாபேக்ஷை (தன் லாபத்தில் இச்சை) அதினாலுண்டாகிற க்ரோதம், அதிலிருந்து பிறப்பதுதான், இவைகளிலிருந்தேதான் ஸமஸ்தபாபங்களுமுண்டாகின்றன. இவைகள் எவ்வளவு சாஸ்த்ர ஞானமிருந்தபோதிலும், அந்த ஞானத்தைக் கீழே அமுங்கும்படி மிதித்து ஜீவனைக் குருடனாக்கித் துஷ்கார்யத்தில் தள்ளிவிடும். ஆதலால் ஸர்வ அநர்த்தத்திற்கும் காரணமான காமத்தைப் போகும்படி செய்யவேண்டும். காமம்போனால் க்ரோதம் உண்டாகவேமாட்டாது. இந்தக்காமத்தை எப்படிப் போகும்படிச் செய்வது?

ஸ்ரீ க்ருஷ்ணன், காமத்திற்கு இருப்பிடமாகிய இடங்களை நிரூபித்து அவைகளை ஸ்வாதீனப் படுத்திக்கொள்ளும் வழியையும் காட்டியிருக்கிறார்.

"𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌸𑍍𑌯𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌏𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌮𑍋𑌹𑌯𑌤𑍍𑌯𑍇𑌷 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯𑌦𑍇𑌹𑌿𑌨𑌂 ॥"
(கீதை, அ.-3. சு-40.)

இந்த்ரியங்கள், மனஸ், புத்தி இம்மூன்றும் காமத்திற்குக் குடியிருப்பிடங்கள்; காமம் இவைகளிடம் சேர்ந்து, ஜீவனிடமுள்ள ஞானத்தில் வ்யாபித்து, மோஹிக்கச்செய்யும்.

"𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌾𑌦𑍌 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ।
𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂𑌪𑍍𑌰𑌜𑌹𑌿𑌹𑍍𑌯𑍇𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌾𑌶𑌨𑌂 ॥"
(கீதை, அ.-3. சு-41.)

ஆகையினால் நீ ஆதியில் இந்த்ரியங்களை ஜயித்து ஞான, விஞ்ஞானங்களை (விஞ்ஞானம்—அநுபவத்தால் ஏற்படும் ஞானம்) நாசம் செய்யக்கூடிய ஸ்வபாவமுள்ளதும், பாப ரூபமானதுமான காமத்தை ஜயித்துவிடு.

இந்த்ரியங்கள், மனஸ், புத்தி, இவைகளை வரிசையாக ஜயிக்கவேண்டும். இவைகள் ஒன்றைவிடஒன்று பலத்தில் அதிகமானவைகள்.

“இந்த்ரியாணி பராண்யாஹு: இந்த்ரியேப்ய: பரம் மன: |
மனஸஸ்து பரா புத்திர்யோ புத்தே: பரதஸ்து ஸ: ||
ஏவம் புத்தே: பரம் புத்த்வா ஸம்ஸ்தப்யாத்மானமாத்மனா |
ஜஹி சத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம் ||”

(கீதை, அ.-3. சு.-42-43.

இவைகளை ஜயிக்குமுபாயங்களைப் பார்க்கலாம்.

முதன் முதலில் ஜயிக்கத்தக்கவை இந்த்ரியங்கள். ஸாமான்ய ஜனங்களுக்கிருக்குங் கோரிக்கைகளெல்லாம் இந்த்ரியபோகங்களைக்குறித்தவை. மனது எப்பொழுதும் அந்தப்போகங்களை சம்பாதிக்கும் ஆலோசனைகளால் நிறைந்திருக்கும். அந்த ஸுகங்களையே தேடிக்கொண்டிருக்கும். து:க்கம் உண்டாகக்கூடிய விஷயங்களினின்றும் தப்பித்துக்கொள்ள வழியைத் தேடிக்கொண்டிருக்கும். அப்படி செய்வது ஸஹஜம்தான். ஆனாலும், இந்திரியங்கள் மூலமாக, விஷங்களால் உண்டாகும் ஸுகம் அநித்யம், க்ஷணபங்குரம் (க்ஷணத்திற்குள் பங்கமாகக்கூடியது), து:க்கத்துடன் கலப்புள்ளது. ஆகையால் அதைவிட கொஞ்சமாகிலும், அதிககாலம் செல்லக்கூடியதும், து:க்கமில்லாததுமாகிய ஸுகத்தைக் கோருவதும் தேடுவதும் ஸஹஜம்தானல்லவா ?

இந்த்ரியங்களை ஜயிப்பதற்கு அவைகளின் தத்வத்தையும் (உண்மையான நிலை), ஸ்வபாவத்தையும் சோதிக்கவேண்டும், இந்த்ரியங்களைக்குறித்த ரஹஸ்யமொன்றுண்டு. அதைத்தெரிந்துகொண்டால் இந்த்ரிய ஜயம் ஸுலபம். மனஸ் இந்த்ரியங்களுடன் கூடச்சேர்ந்து வேலை செய்துகொண்டுவரும். அப்படி மனதானது இந்த்ரியங்களுடன் கலந்திருக்கும்பொழுதுதான் இந்த்ரியங்கள் ப்ரவர்த்திக்கக்கூடும். இந்த்ரியங்களிலிருந்து மனதை வேறுபடுத்தினால் எந்த இந்த்ரியமுந் தனித்து வேலைசெய்ய முடியாது. ஏதாவதொரு விஷயத்தை ஆழயோசிக்கும் காலத்தில் அப்படிப்பட்டவருக்கு சப்தம் கேட்காது; ரூபங்கள் பார்க்கமுடியாது. நாக்குக்கூட ருசியை அறியமுடியாது. ஒரு இந்த்ரியம்

கூடத் தன்னுடையதான வ்யாபாரத்தைச் செய்யமுடியாது. அப்படிப்பட்ட ஸமயங்களில் அவர்கள் “அன்யமனஸ்கர்கள்” ஆக இருக்கிறார்களென்பார்களல்லவா ? அப்படியே நாம் ப்ரயத்ன பூர்வமாக மனதிற்குமிகவும் ப்ரியப்பட்ட வேலையைக்கொடுத்தால் மனஸ் அந்தவேலையில் இருக்கும்வரை இந்த்ரிய வ்யாபாரங்களடங்கி இருக்கும். ஆனால் அந்தவேலையில் மனஸிற்கு ருசியுண்டாகும்படிச் செய்யவேண்டும். க்ரம க்ரமமாக அப்யாஸத்தினால் அபிருசியுண்டாகும்படிச் செய்தால், மனஸ் அந்தவேலையில் அதிக ருசியுள்ளதாகும். அப்பொழுது இந்த்ரியங்களடங்கி கீழ்ப்படியும். நல்ல க்ரந்தங்களையும் நூல்களையும் ப்ரஸங்கித்தல், அப்போதைக்கப்போது குறிப்பிட்ட காலத்தில் பகவத்யானம் செய்தல் இந்த இரண்டும் மனதைப் பலப்படுத்தி இந்த்ரிய வ்யாபாரங்களினின்றும் திருப்பும் உபாயங்கள். ப்ரதிதினமும், கொஞ்ச காலம் ப்ரயத்ன பூர்வகமாய் ஸத்க்ரந்த காலக்ஷேபத்தில் விநியோகிப்பதும், சிறிதுகாலம் ஈசுவரத்யானத்தில் உபயோகிப்பதும் நியாயமாகச்செய்துகொண்டு, அந்த நியமத்தைத் தவறாமல் நடத்தினால் படிப்படியாக மனச்சக்தி விருத்தியாகும். மனஸ் ஸ்வதந்த்ர வ்யாபாரத்தில் ப்ரவர்த்தித்துக்கொண்டிருக்க, இந்த்ரியங்கள் மனஸின் ஸஹாயமின்றி சக்தியில்லாமையால், எந்தவேலையைச் செய்யச்சொன்னாலும் அந்தவேலையைச் செய்துகொண்டு நிற்கச்சொன்னபொழுது, நின்றுகொண்டு ஸ்வாதீனம் ஆகும். சாஸ்த்ரவிசாரம் முதலானவைகளால், யுக்தா யுக்த க்ஞானம் கூட வ்ருத்தியாகி, இது செய்யத்தகும், இது செய்யத்தகாது என்ற ஞானம்கூட உண்டாவதால், இந்த்ரிய வியாபாரங்களை நிரோதம் செய்யவும் ஸாஹகாரியாகும். இப்படிப் பகவத் ஞானத்தாலும், சாஸ்தர உயர்ந்த க்ரந்த ப்ரஸங்கத்தினாலும், இந்த்ரிய ஜயம் ஸாத்யமாகுமே ஒழிய, மனச்சக்தியையும் ஞானத்தையும் பலப்படுத்தாமல் இந்த்ரியங்களை ஜயிக்க ஸாத்யமாகாது.

“மனஸைவேந்த்ரியக்ராமம் விநியம்ய ஸமந்தத:”

(கீதை, அ.-6,-24.

“மனதினாலேயே இந்த்ரியங்களை நன்றாக நியமித்து” என்று ஸ்ரீக்ருஷ்ணன் போதித்திருக்கிறார்.

ஆகையால்தான் பூர்விகர்கள் ப்ரதி மனிதனுக்கும் ப்ரதினமும் பகவத்யானமும் ஸாஸ்தரவிசாரமும் விதித்தார்கள்.

ஹிந்துசாஸ்த்ரங்கள் ப்ரதி மனுஷ்யனும் நித்தியம் கொஞ்சகாலம் இஷ்டர்களுடனும், சிஷ்டர்களுடனும் (நல்லநடவடிக்கை யுள்ளவர்கள்) புராணங்கள், இதிஹாஸங்கள் முதலான ஸத்க்ரந்தங்களை ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்னும், மேலும் அஸத்தான சாஸ்தர விநோதங்களையும், நிந்தையையும் விடவேண்டுமென்றும் உறுத்தி சொல்லுகின்றன. அப்படியே திவ்யஞான ஸமாஜ சாகைகள் எங்கே எற்பட்டாலும். ஸமாஜத்திய அங்கத்தினர் இதரர்களுடன் சேர்ந்து ஸத்க்ரந்தபடனம் அடிக்கடி நடத்த யத்னம் செய்யவேண்டியதென்று நியமும்உண்டு.

இப்படி இந்த்ரியஜயத்தை அடைந்ததினாலேயே காமம்ஜயிக்கப்பட்டதாக ஆய்விடாது. இந்த்ரியங்களுடன் சேர்ந்து ஜீவனைப் பாதிப்பதில்லையே தவிர மனஸ், புத்தி என்ற இரண்டு கோட்டைகளில் சேர்ந்து, அந்தஜீவனைத் தப்புவழிகளில் இழுத்துக் கொண்டேயிருக்கும். ஆகையால், மனஸ்ஸை ஜயிப்பது என்பது பிறகு செய்யவேண்டியவேலை. முன்பழக்கத்தால் கொஞ்சம் வரையில் மனதின் குணமாகிய சாஞ்சல்யம் ஜயிக்கப்பட்டது. மனச்சக்தியும் பலப்பட்டுவந்தது. ஆகிலும், மனதினிடத்திலுள்ள தோஷம் போகவில்லை அந்தத் தோஷமேதெனில் காமஸங்கல்பம்

[illegible]
[illegible] ॥

(அம்ருதபிந்தூபநிஷத்)

மனஸினிடத்திலுள்ள காமமெப்படிப்பட்டது. சரீரஸுகங்களையும் துச்சமான போகங்களையும் தாண்டாதது. நான் தனவான், பண்டிதன், அதிகாரி, பக்தன் என்ற பாவங்களால் நிறைந்து, கீழ்ப்பட்டவர்கள் எல்லாரை விடவும் தான் அதிகன் என்ற பாவமும், தான் வேறென்ற பாவமும் உண்டாகிப் பிறர்களின் ஸுகதுக்கங்களை யோசிக்காமல் "தன் ஆயுஷ்யம், தன் ஆரோக்யம்" என்று அஹம்பாவத்துடன் சேர்ந்தவனாவான். இதன் பேர்தான் "அஹங்காரம்" ஒருவேளை சிறிதுமட்டும் ஏழைகளுக்கு ஸஹாயம் செய்யப் புகுந்தாலும், அவர்களை அவமதிப்பான பாவத்துடன் பார்ப்பதும், தன்னைவிடக் கௌரவமானவர்களைப் பார்க்கும்போது, அசூயையுடன் அவர்களை பார்ப்பதும் ஸமமான பதவியிலிருக்கிறவர்களிடத்தில் பொறாமையும், இத்தகைய குணங்கள்

அப்படிப்பட்டவர்களுக்கு ஸகஜமான குணங்கள். இந்தத் துர்க்குணங்களைத் தொலைப்பதற்கு உபாயம் எது? எப்படியானால் மனச்சக்தி ஸஹாயத்தால் இந்த்ரிய ஜயம் ஸாத்தியமாகுமோ அப்படியே மனஸுக்கு அதிகமான "புத்தி" யின் ஸஹாயத்தால் மனஸிலிருக்கிற அழுக்கைப் போக்கடிக்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

A. இராமஸ்வாமி சாஸ்திரிகள்.

உலகினருக்கு நாமளித்துதவ வேண்டிய உபதேசங்கள்.

(தொகுதி 16, 255-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி முடிவில் நமக்கு கர்வமென்னுங் குணத்தாலும் மிக ஆக்கம் ஒருகாலத்தில் வாழ்வினிலுண்டாகியது—மற்றவரிடமில்லாததோர் விசேடகுணம் நாம் அடைந்திருக்கிறோமென வுணர்தலும், எவ்விஷயங்களையு மதிப்பிட்டுக் குறிப்பிடுந் திறல் ஏனையோரிடமிருப்பதைக்காட்டினும் நம்மிடம்பெருகி மிகச்சிறந்து விளங்கி நிற்கின்றதென அறிதலும், வீரியமு மேன்மையும் நம்மிடம் இருப்பது பிறர் யாவருமறியாவிடினும் நமக்குமட்டும் ரஹசியமாய் தெரிகின்றதெனலும் ஆகிய இவ்வெண்ணங்கள் நமக்கு ஒரு சமயத்தில் மிக ஆனந்தத்தை யூட்டிற்று. ஏனெனில் இக்குணங்களற்ற சாமானிய மானிடரைப்போலல்லாதுச் சற்றுப் பார்த்தவழியில் நாம் அப்பொழுது காலங்கழித்துவந்தோம். ஆயினும் இக்காலங்களிலுங்கூட ஒவ்வோர் சமயங்களில் நமக்கு இழிவும் அவமதிப்பு முண்டாகியது. ஏனெனில் உலகம் நமது நற்குணங்களை மதிக்காது அலக்ஷியம் செய்தது; அப்படியே நமது விதியும் பிரதிகூலமாகி நமக்கு அநியாயத்தையே விளைவித்துவந்தது. அவ் வனுபவங்களைப் பலமுறையுமனுபவிக்கும்பொழுது, நமக்கு இக்கருவமென்னும் குணமும் மற்றவைகளும் உண்மையில் பொய்யானவைகளே (1) என்

(1) யானே பொய்யென்னெஞ்சும் பொய்யென்னன்பும் பொய்
ஆனால் வினையேனழுதா லுன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்றெளிவே தித்திக்கும்
மானே யருளாயடியேனுனை வந்துறுமாறே.

திருச்சதகம். 90—திருவாசகம்.

றும் அவற்றை யாதரவாக்கொண்டு நாம் மதிமயக்கங்கொண்டது தவறுதலே யென்றும் புத்தியுண்டாகின்றது. நமக்குள்ளதைக் காட்டிலும் பெரியதோர் கருவமும் நம்முடையதினு முயர்ந்ததோர் அனுபவமும் நம்முடைய கருவமாதி குணங்களைப் பழித்துத் தலை நாணச்செய்தது. (2) இஃது நம்மை யவமதித்து, முன்னர் நாமிகழ்ந்து புறக்கணித்த நிலைமைக்கே நம்மைத் தாழ்த்தி வந்தது. இவ்விதம் நம்முடைய கருவமல்லது அகங்காரம், நமது திறமையல்லது அனுபவ மிவற்றைக்காட்டினும் பெரியதுவுஞ் சிறந்ததுமான குணத்தையுடைய மகாசுத்தியைக்கொண்ட வது தான் யாதோவெனில் நாம் முற்கூறிய பரம நண்பனும் ஏகமூர்த்தியேயன்றி வேறன்று என்த் தெளிதல் வேண்டும்.

இப்பால் நமது மகா நண்பன் தன்னை நாமறிந்துகொள்ளும்படி காட்டும் வழிகளிலொன்று, தானம் அல்லது தியாகமாகும். அஃதெப்படியெனில் விளக்குவாம். நமக்குழைத்துவரும் கீழ்ப்பட்ட மிருகத்தினிடம் நாம் சிறிது அன்புடைக் கவனம் செலுத்தி, அது தாங்கிச்செல்லும் சுமை அதன் சத்திக்கு அதிகப்படாமலும் சற்றே குறைந்ததுமாயிருக்கும்படி செய்கிறோம். முன்போலல்லாமல் நமக் கதனால் ஆகுங் காரியங்களையே போற்றிவாராமல் இப்பொழுது அதற்கு வேண்டிய தீனி, தண்ணீர்களைக் கொடுப்பதோடு இன்னுஞ் சற்றதிகமாகவே அதற்கு போஷணைகளைச் செய்துவருகிறோம். இவ்விதம் நாம் செய்யக் கடமைப்பட்டதைக் காட்டினும் சற்றதிகமான நன்மையைச் செய்யத் துணியும்பொழுதெல்லாம் மேற்சொல்லிய நமது பரம நண்பனும் அண்ணல் தனது அன்பின் பெருக்கினின்றும் ஒரு சோதிக்கிரணத்தைவீசி யதைக்கடாக்ஷித்து நமது அற்பக் காரியத்தில் முன்னர் இல்லாததோர் அம்சத்தையுண்டுபண்ணுகிறான் என்பது உண்மை.

இப்படியே நமக்குச் சமானரான பெற்றோர், கணவன் அல்லது மனைவி, குழந்தை அல்லது மித்திரன் இவர்களுக்கு வரவர

---

(2) தனித்துணை நீ நிற்க யானருக்கித் தலையானடந்த
வினைத்துணையேனை விடுதிகண்டாய் வினையேனுடைய
மனத்துணையேயென் றன்வாழ்முதலேயெனக்கெய்ப்பில்வைப்பே
தினைத்துணையேனும் பொறேன் றுயராக்கையின் திண்வலையே.

நீத்தல விண்ணப்பம். 39—திருவாசகம்.

அதிகமதிகமாய் நாம் நமக்குச்சொந்தமான வஸ்துக்களை ஈந்துவரப் பழக்கமடைகிறோம். ஆரம்பகாலங்களில் சிறிது மனமில்லாமலும் பிறகு நாம் செய்யவேண்டிய கடமையே யிதுவென்றும், கடையில் அவ்விதமீந்து வருதலே நமக்கானந்தம் விளைவிக்கும் தொழிலென்றும் இவர்களிடம் நாம் எக்கொடையையும் செய்துவரத் துணிகிறோம். இச்சமயங்களில் நமது சொந்தமான பொருள்களல்ல, பின்னை பிறர்க்கு வழங்கப்பட்ட, அல்லது அவரொடும் பகிர்ந்து நாம் அனுபவித்தற்கு உதவுகின்றவைகளே இத்தருணத்திலும் அந்தரங்கத்திற்கு பிரீதியை விளைவிக்கின்றன. நமது சுவய நலத்தை மறக்கத் துணிந்து பிறர்மீது சிந்தனைகொள்ளுங் காலை முற்கூறிய பரம நண்பனும் மூர்த்தியே நம்முட்புகுந்து தனதுயர் குணவன்பின் வழிகளை கனவுபோற் பிரகாசிக்கச் செய்து தன் 'பூங்கழல்' காட்டுகின்றான் என்னு முண்மையை நாமறிந்துய்கின்றோமில்லை.

இனி மேலே கூறிப்போந்தவண்ணம் பல்காலம் கீழ்மார்க்கங்களிலெல்லாம் பழகி வந்தபின் நாம் எப்பொருளையும் நமதெனக் கருதாமல் நமதுயிரினுக்குயிரென நாம் அப்பெரியோனுக்கே அற்பிக்கும் பக்குவமுடையவராகின்றோம். இம்மாப்பெரும் வஸ்துவைத்தான் சிலர் கிறிஸ்து அல்லது கிருஷ்ணன்—அண்ணல் அல்லது கடவுள் எனப் பெயரிட்டழைக்கின்றனர், மற்றுஞ்சிலர் இவ்வாறு தாம் போற்றிவரும் வஸ்துவை அக்கடவுளது அம்சம் அல்லது ஸ்ரீ குருதேவன் எனக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றனர். இனி வேறு சிலர்க்கு இவ்வஸ்துவும் அவரவர்க்கு காலத்திரயத்திலும் அடையத் தகுந்த சகல மேன்மைகளையும் தரவல்ல இஷ்டதேவனது மூர்த்திகளில் எதுவோ வொன்றாகும். ஆயினும் இவ்வனந்தம் வகுப்பினரும் கொண்டாடுவதும், தமக்குரிய யாவற்றையுமற்பணம் செய்தற்குரியதாக் கொள்வதும் அவ்வொரே நண்பனையே தவிர வேறில்லை. ஏனெனில் நம்மனைவரையும் பக்குவப்படுத்தி முடிவில் நம்மொடு சேர்ந்து ஆனந்திக்கும் வஸ்து வொன்றே முடிவில் இங்கும் எங்கும் உள்ளதுவாகும். நாம் பிறந்தது அவனிடத்திலேயே, முடிவிற் சென்றடையவேண்டியதும் அவனிடத்திலேயே. அவனே நம்மை யிவ்வாறு பாஹியப் பிரபஞ்சத்தில் வெளியேற்றியனுப்பியவன், மறுபடியும் தன்னிடம் வந்து சேருதற்கு நம்மை அழைப்பதும் அவனே. ஆதலின், நாம் முடிவினில் நமக்குறி

யதையெல்லாம் அவனிடம் ஒப்புவித்து நம்மையேயிழந்து நிற்கும் தருணத்தில்தான் நமக்கு உண்மையானவாழ்வுயாதென உணர்ந்து பேரானந்தக் களிப்புறும் காலமும் வந்தெய்தும். (1)

(இன்னும் வரும்.)

P. R. ஸுந்தரராஜய்யர்.

தேங்காயின் மகிமை.

—:o:—

ஹிந்து மதஸ்தர்கள் தேவாலயங்களுக்குச் செல்லுகையில் பழம், புஷ்பம், வெற்றிலை பாக்கு இவைகளுடன் தேங்காயையும் கொண்டுபோய் நெய்வேதனம் செய்வது வழக்கமாக இருக்கிறது.

2. ஆசாரிய சுவாமிகளிடம் தெரிசனத்திற்காகச் செல்லுகையில் தேங்காயைக்கொண்டுபோய் காணிக்கையாக வைத்து வந்தனம் செய்கிறார்கள்.

3. ராஜாக்கள், பிரபுக்கள் இவர்களிடம் செல்லுகையில் பூர்ண கும்பத்துடன் தேங்காயையும் கொண்டுபோகிறார்கள்.

4. கலியாணம், உபநயனம் வகையரா சுபகாரியங்களுக்குப் பிற்பாடு வந்தவர்களுக்கு வெற்றிலை பாக்கு கொடுக்கையில் தேங்காயையும் கொடுத்துவருகிறார்கள்.

5. வைதீகர்கள் கிரஹஸ்தர்களைக் காண்கையில் தேங்காயை வேதமந்திரங்களைச் சொல்லி ஆசீர்வதித்துக் கொடுக்கிறார்கள்.

---

(1) மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோடிந்திரனும்
எப்பிறவியுந்தேட என்னையுந் தன்னின்னருளால்
இப்பிறவியாட்கொண் டினிப்பிறவாமேகாத்து
மெய்ப்பொருட் கட்டோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்குந் தானேயாயாவைக்கும் வீடாகும்
அப்பொருளா நஞ்சிவனைப் பாடுதுங்காணம்மானாய்.

திருவம்மானை. 12—திருவாசகம்.

அப்பார் சடையப்பனானந்த வார்கழலே
ஒப்பாக வொப்புவித்த வுள்ளத்தாருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானாய்.

திருவம்மானை. 11—திருவாசகம்.

6. தேங்காய்க்கு இவ்வளவு மகத்துவம் வரக்காரணம் என்னவென்று விசாரிப்போம்.

இதைக்கொடுக்கும் தென்னமரம், தான் வேரால் உண்ட நீரைப் பின்னால் தலையால் இளநீர் மூலமாய் பலத்துடன் கொடுக்கிறது.

இவ்விதம் வேறு மரங்கள் செய்வதைக் காணவில்லை. தான் பெற்ற நன்றியை மறவாமல் காட்டுகிறது. இதிலிருந்து "நன்றி மறக்கத்தக்கதல்ல", என்ற தத்துவத்தை நாம் பெறுகிறோம்.

7. தேங்காயின் பருப்பு வெண்மை நிறமானதாகயிருக்கிறது. சாப்பிடவும் ருசியுள்ளதாகயிருக்கிறது. இவ்விடத்தில் அடியில்கண்ட ஔவைக்குறள் கவனிக்கத்தக்கது:-

" வெள்ளி பொன் மேனியது தொக்கும்
வினையுடைய உள்ளுடம்பதன் ஒளி"

தமிழ்நாடு
210806

இருவினைக்குட்பட்ட நம்போன்ற மனிதர்களுடைய உள்ளுடம்பு பொன்னையும் வெள்ளியையும் போன்றதென்பார்—அதாவது காமசம்பந்தமானது பொன்னாகவும், அவ்விதமின்றி பரிசுத்தமானது வெள்ளியாகவும் தோன்றுமென்று ஒரு பெரியார் கூறியுள்ளார்.

8 பகவத்கீதையின் 14 வது அத்தியாயத்தில் மனிதரைப் பாதிக்கும் குணங்களான சத்வ, ரஜஸ், தமஸ் என்னு முக்குணங்களில், சத்வகுணம், சுத்தம், ஞானம், பிரகாசம், உத்தமலோகங்கள் முதலிய இவைகளை அடையும்படி செய்யும் என்று கண்டிருக்கிறது. சத்வகுணம் அதாவது அந்த எண்ணம் வெண்மை நிறமுள்ளது—ஆகையால் சுவாமி தரிசனம் குரு தரிசனம் இவைகளின் நிமித்தம் செல்லுகையில் தங்களிடம் சத்வகுணம் மேலாக விளங்கும்படி அனுக்கிரஹிக்கவேணுமென்ற கோரிக்கையுடன் தெரிந்தோ, தெரியாமலோ செய்வதாக ஏற்படுகிறது. அவ்விதமே எண்ணி கல்யாணம் வகையரா சமயங்களில் தேங்காய் கொடுபடுவதாக ஊகித்துக்கொள்ளலாம். தேங்காயை கையில் எடுக்கும் சமயமெல்லாம் சத்வகுண ஞாபகம் ஒருவனுக்கு வருமானால் நாளடைவில் அக்குணம் மேலிட்டு மற்றகுணங்கள் தாழ்வை அடையும் என்பதில் சந்தேகமில்லை, அதனால் இகத்துக்கும் பரத்துக்கும் சாதகமென்று நான் சொல்லவும் வேண்டுமோ? அவ்வித ஞாபகம் மனிதர்களுக் குண்டாகும்படி எல்லாம் வல்ல ஈசன் அருள் புரிவாராக.

K. S. இராமச்சந்திரய்யர்.

பென்ஷன் தாசில்தார்,

பஞ்சமஹா யக்ஞம்.

15-ம் பக்கத் தொடர்ச்சி.

ரிஷியக்ஞம் அல்லது ஞானயக்ஞம்.

ரிஷியக்ஞமெனின் ஞான நூல்களைப் படித்தலேயாம். ஞான நூல்களைப்படிப்பதேன்? ஜன்மங்களில் மானிட ஜன்மம் அரிதென, பெரியோர்கள் எல்லோரும் ஒரேமொழியாய் ஒத்துச்சொல்லியிருக்கிறார்கள். அறிவு ஒன்றினால் மாத்திரம் மானிடஜன்மத்திற்கு விசேஷம் ஏற்பட்டதேயொழிய வேறொன்றினாலும் அன்றெனத்தெளியாய் விளங்கும். அறிவு அல்லது ஞானம் இல்லாவிடின், மனிதனைப் பசுவிற்கு அதாவது மிருகத்திற்குச்சமானமெனப் பலர் சொல்வார்கள். அவ்விதம் சொல்வதற்கு என்மனம் இடம் தரவில்லை. ஏனெனில், மிருகங்கள் ஈசுவரச்சட்டத்திற்கு மாறாக நடப்பதில்லையென்பதை நாம் அனுபவத்தில் கண்டறியலாம். மாறாக நடக்கும் ஸ்வபாவம் இரண்டுகால் மிருகமாகிற மனிதனிடம் இருக்கிறதேயொழிய நாற்கால் மிருகங்களிடத்து இல்லாதபடியால், ஞானமற்ற மனிதனை எவ்விதம் மிருகத்திற்கு ஒப்பாகச் சொல்லக்கூடும்? சொல்லக்கூடாதன்றோ! ஆகையால் மிருகத்திற்கும் தாழ்ந்தவனேயாவன். ஆகையால் அரிதாய்க்கிடைத்த மானிடஜன்மத்தின் யோக்கியதையைக் காப்பாற்ற மனிதர்கள் எல்லோரும் முயற்சிப்பது இன்றியமையாத கடமையாகும். அதற்காகவே நம் முன்னோர்கள் ரிஷியக்ஞம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனுடைய தத்துவத்தை ஒருவாறு சுருக்கமாய் விசாரித்துப் பார்ப்போம். மனிதனுக்குப் பஞ்சகோசங்கள் அதாவது ஐந்து சரீரங்கள் உள்ளனவென்று கேள்விப்பட்டிருக்கின்றோம். அவையாவன:—அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் கோசங்களே. எந்தச் சரீரமாகினும் சரியே சரீரத்திற்கே பொதுவாகச் சில தர்மங்களிருக்கின்றன. அவையாவன:—

1. உபயோகப் படுத்தப்பட்ட சரீரம்தான் பிரவர்த்திக்கும்.
2. உபயோகப்படுத்தப்படாத சரீரம் பிரவர்த்திக்கமாட்டா.
3. ஸன்மார்க்கத்தில் பழகிய சரீரம் நன்றாயும் துர்மார்க்கத்தில் பழகிய சரீரம் கெடுதலாயும் அமையும்.

இதன் உண்மையை நமது ஸ்தூல சரீரத்திலேயே கண்டறியலாம். ஒருவனை ஆறுமாதகாலத்திற்கு அசையாமல் ஓர் இடத்-

தில் வைத்து, அவனுக்குவேண்டிய ஸ்நானபானாதி ஆஹாரம் முதலியவைகளைக் கொடுத்து வந்தாலும், மேற்கண்ட காலத்திற்குப் பின்னர் அவனுக்கு அவயங்களிருக்கினும் நடமாட்டம் முதலியவைகளுக்கு இடந்தராதென்பதை நாம் சுலபமாய்த்தெரிந்துகொள்ளலாம். ஏனெனில், பகவத் கீதையில் கூறியபடி சரீரத்திற்கு மிதமான வேலை கொடுக்கவேண்டும். இல்லாவிடின் அங்கங்களின் சக்தி குறைந்துபோம். ஆகையால் சரீரத்திற்கு மிதமாய் யுக்தமான வழியில் வேலை கொடுத்து வருதலே நன்மையாகும். மிதமிஞ்சி அயுக்த வழியில் உபயோகிக்கின் கெடுதலடையுமென்று சொல்லவும் வேண்டுமோ? இந்த தர்மங்களே ஏனைய சூக்ஷ்ம சரீரங்களுக்கும் ஒக்கும். விஷயமிவ்வாறிருக்க, நாம் ஸ்தூல சரீரம், காமசரீரம், மனோ சரீரம் இவைகளைமாத்திரம் பலவாறான விபரீத வழிகளில் உபயோகப்படுத்தி வருகிறோமேயொழிய விக்ஞானமய கோசத்தின் பக்கம் மாத்திரம் திரும்பிப் பார்ப்பதில்லை. அந்த ஞானமய கோசத்திற்கு உணவு கொடுக்க முயற்சிப்பதுமில்லை. பகல் இரவு 24 மணிநேரம் ஸ்தூல சரீரத்தைக் கவனிப்பதிலும், விசேஷ நேரம் அசுபஇச்சைகளிலும், துர்சிந்தனைகளிலும் தாராளமாய்ச் செலவழித்தும் வருகிறார்கள். ஞானமயகோசம் என்ன பாபஞ் செய்ததோ? அதற்கு 24 மணி நேரங்களில் அரைமணி நேரமாயினும் திருடியாவது கொடுக்க மனமில்லாதவர்களாயிருக்கிறார்கள். ஸ்தூல சரீரத்திற்கு ஏற்பட்ட உணவு முதலியவைகள் ஞானமய கோசத்திற்கு வேண்டியதில்லை. அதற்கு வேண்டியது ஞான நூல் சிரவணமேயாம். இதைத்தான் நாயனார், "செவிக்குணவில்லாதபோழ்து சிறிது வயிற்றுக்குமீயப்படும்" என்று சொன்னார்.

(இன்னும் வரும்.)

V. இராமச்சந்திர நாயுடு,

ஸமாசாரக் குறிப்புகள்.

சென்ற ஜூலைமீ 23உ முதல் 26உ முடிய ஆம்மென் என்னுமிடத்தில் உதயதிசை நக்ஷத்ர சங்கத்தின் சர்வதேச மஹாநாடு நடந்தபொழுது 29 தேசங்களிலிருந்து 2000 பிரதிநிதிகள் விஜயஞ்செய்திருந்தனர். டாக்டர் பெஸண்டு அம்மையார் உலகத்தை உள்ளேயிருந்து ஆட்டுவிக்கும் அரசாட்சி என்பதைப்பற்றி ஓர் உபந்யாசம் செய்தனர். இவ்விடத்தில் ஏற்கனவே உதயதிசை நக்ஷத்ரஸபைக்கு 5000 ஏகர் உள்ள ஓர் எஸ்டேட் ஓர் பிரபுவால் நன்கொடை அளிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட தினங்களில் அடையாற்றில், சென்னை, அடையார் இவ்விரண்டிடங்களிலுமுள்ள மெம்பர்கள் இந்த தினங்களை, பிரார்த்தனை, சம்பாஷணை, தியானம், மீட்டிங்குகள் சங்கீதக் கச்சேரி முதலியவைகளை நடத்திக்கொண்டு விசேஷ சிரத்தையுடன் கொண்டாடினார்கள்.

சென்ற ஜூலைமீ 24உ முதல் 27உ முடிய 4 தினங்களில், வட தமிழ் ஜில்லாக்களின் பிரம்மஞானக் கிளைச்சபைகளின் 7-வது வருஷாந்தரக்கூட்டம் (Federation) புதுவைமாநகரில் வெகு சிறப்பாய் நடைபெற்றது. அச்சமயம் திவான்பஹதூர். ஸர். டி. ஸதாசிவய்யர் அவர்கள் அக்ராஸனம் வகித்தனர். வெளியூர்களிலிருந்து சுமார் 70 மெம்பர்கள் விஜயஞ்செய்திருந்தனர் உள்ளூர் மஹா ஜனங்கள் ஒவ்வாரு கூட்டத்திற்கும் திரளாய் வந்திருந்து விசேஷ சிரத்தையுடன் கேட்டு ஆநந்தித்தனர். 24உ மாலை அக்ராஸனாதிபதி யவர்களுக்கு ஓர் சிறந்த உபசாரப்பத்திரம் அளிக்கப்பட்டது. அக்ராஸனர் அதற்குத்தக்க விடை கூறியபின்னர், உபசாரப்பத்திரத்தில் கண்டுள்ள அம்சங்களை ஆதாரமாக எடுத்துக்கொண்டு தன் ஆரம்ப உபந்யாஸத்தைப் புரிந்தனர். பிறகு பிரம்மஸ்ரீ T. இராமச்சந்திரராயர் அவர்கள் **மஹாரிஷிகளும் அவர்களை யடையும் மார்க்கமும்** என்பதைப் பற்றி வெகு உருக்கமாய் தெலுங்கில் உபந்யஸித்தனர். 25உ காலை 6½ மணிக்கு பாரதஸமாஜபூஜை பிரம்மஸ்ரீ C. இராமய்யா B. A., L. T. அவர்களால் நடத்தப்பட்டது. சாயந்திரம் 3½ மணி முதல் 4½ மணி வரையில் அக்ராஸனாதிபதியவர்கள் கேள்விகளுக்கு விடையளித்தனர். 4½ மணி முதல் 5½ மணி வரையில், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்து ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக சிவாசாலை ஸ்வாமிகள் **நமக்கு வேண்டியவை யாவை?** என்ற விஷயமாய் விசேஷ வாக்சாதுர்யத்துடனும் சிறந்த தமிழிலும் அழகிய உபந்யாஸம் செய்தனர். அவரது முடிவுரையில், பிரம்மஞான ஸபையைப்பற்றியும், அது செய்துவரும் அபாரமான லோக கைங்கரியங்களைப்பற்றியும், அதன் மெம்பர்களின் உண்மையான சிரத்தா பக்திகளைப்பற்றியும் அவர்கள் கைக்கொண்டொழுகும் ஸர்வஜன ஸகோதரத்வத்தைப்பற்றியும் வெகு சிறப்பாய் எடுத்துரைத்துக் கொண்டாடினர். அடுத்த உபன்யாஸம் ஸ்ரீ ஜகத்குருவின் வருகையைப்பற்றி அக்ராஸனாதிபதியவர்களால் வெகு உருக்கமாய் செய்யப்பட்டது.

26உ காலை 6½ மணிக்கு பாரதஸமாஜ பூஜை நடத்தப்பட்டது. சாயந்திரம் 3½ மணி முதல் 4½ மணி வரையில் ஸ்ரீமான் R. ஸ்வாமிநாதய்யர் அவர்களால் **சூர்யநாராயண பழந்துறை** என்பதைப்பற்றி உபந்யாஸம் செய்யப்பட்டது. பிறகு பிரம்மஸ்ரீ C. இராமய்யா அவர்கள் **புருஷார்த்தம்** என்பதைப்பற்றி சிறந்த உபந்யாஸமொன்று தமிழில் செய்தனர். அடுத்த உபந்யாஸம் புதுக்கோட்டை ஸ்ரீமான் T. V. இராமச்சந்திரய்யர் அவர்களால் **ஜீவகாருண்யம்** என்பதைப் பற்றி உபந்யாஸம் செய்யப்பட்டது. 27உ காலையில் பாரதஸமாஜ பூஜை நடைப்பெற்றது. 9½ மணி முதல் 10½ மணி வரையில் மெம்பர்களின் கூட்டம் நடத்தப்பட்டது. 4 மணி முதல் 5 மணி வரையில் பிரம்மஸ்ரீ P. R. ஸுந்தரராஜய்யர் அவர்கள் **பகவத்கீதையின் மஹிமை** என்ற விஷயமாய் கேட்போர் மனம் பரவசமாகும்படி வெகு சிறப்பாய் உபந்யஸித்தனர். கடைசியாய், 26, 27 தேதிகளில் ஸர். டி. ஸதாசிவய்யர் அவர்கள் வேறு வேலையால் ஊருக்குப்போக நேர்ந்ததால் அத்தினங்களில் அக்ராஸனம் வகித்த பிரம்மஸ்ரீ C. இராமய்யா அவர்கள் தன் முடிவு உபந்யாஸத்தை வெகு சிறப்பாய் புரிந்தனர். பின்னர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது. இந்த 4 தினங்களில் நடந்த கூட்டம், உலாந்தா தேசத்தில் ஆம்மென் என்னும் நகரத்தில், உதயதிசை நக்ஷத்ரசங்கத்தின் உலக மஹாஸபை நடைப்பெற்ற தினங்களிலேயே இங்கும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

களாக இருக்கிறார்கள். ஆத்மவிகாஸம் என்னும் தொழில் மஹாரிஷிகளிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தம் அநுக்ரஹரூபமான சக்திகளை நமக்கு எப்போதும் வர்ஷித்த வண்ணமாகவே யிருக்கிறார்கள். ஒரு தேசத்தின் ராஜாங்க முறையை அரசன் பெயரைக்கொண்டு அதிகாரிகள் இயற்றுவதுபோல, கடவுள் கிருபை மஹான்களின் மூலமாகத்தான் கிடைக்கும்.

39. மஹத்ஸங்கஸ்து துர்லபோऽகம்யோऽமோகஸ்ச ॥

OF THE REGIS... 10 AUG 1926 ...A I...

மஹான்களுடைய உறவு கிடைப்பது கஷ்டம். அவர்களிடம் நாம் போகமுடியாது. ஆனால் மிகவும் பயன் தரக்கூடியது வாஸ்தவமானது.

குறிப்பு:—"கிடைப்பதரிது" என்பதனால், சிஷ்யன் தக்க பிரயத்னம் செய்யத் தயாராயிருக்கவேண்டும். மஹான்களும் தக்க சிஷ்யர்களைத் தேர்ந்தெடுக்க ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். மஹான்களுடைய உறவு அரிதென்றும், ஆனால் அது வாஸ்தவமாகவே மிகப் பயன்தரக்கூடியதென்றும் சொல்வதனாலேயே, அதற்குத்தான் நாம் முயற்சிக்க வேண்டும் என்பது நன்கு விளங்குகிறது. இதைப் பின் ஒரு சூத்திரத்தில் கூறுகிறார். சிரமப்படுகிறவர்களுக்கு சுலபம். சிரமப்படக் கூசுகிறவர்களுக்குத் துர்லபம்தான். "காகமுறவு கலந்துண்ணக் கண்டீர், அகண்டாகாரசிவ போகமெனும் பேரின்பம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏகவுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிடநாம், இனியெடுத்ததேகம் விழுமுன், சேரவாரும் ஜகத்தீரே" என்று தாயுமானவர் இந்த பக்தி மார்க்கத்திற்கு ஜனங்களை அழைத்திருக்கிறார். மஹான்கள் சிஷ்யர்கள் எப்போது வரப்போகிறார்களென்று ஆயத்தமாக அவர்களைக் கட்டித் தழுவி ஆசீர்வதிக்கும் அபய வரத ஹஸ்தங்களோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் ஜனங்களுக்குத் தான் அவர்களிடத்தில் நம்பிக்கையை விசேஷமாகக் காணோம். கதிரவன் கிரணங்கள் பூமியெங்கும் சந்து

பொந்திலெல்லாம் வியாபித்தபோதிலும் குருட்டுக் கண்ணன் வெளிச்சத்தாற் பயன்படமுடியாதல்லவா? "மஹான்களைப் பார்த்திருக்கிறோம். அவர்களுடைய உபதேசங்கள் இன்னின்ன. அவைகளைச் செய்யுங்கள். நீங்களும் அவர்களையடையலாம். நாங்கள் இன்னவழியாய்ப் போய் அவர்களை அடைந்தோம். நீங்களும் அடையுங்கள்" என்று சொல்கிறவர்கள் உலகத்தில் மிகச் சொற்பம். அப்படிச் சொல்கிறவர்களை ஜனங்கள் இதுவரை பரிகசித்தும் ஹிம்ஸித்தும் வந்திருக்கிறார்கள். ஆனால் தற்காலத்தில் அநேகர் மஹான்களையடையவேண்டும் என்ற கருத்துடனே ஒருமித்திருக்கும் ஆத்மவித்யாசபை யொன்று உள்ளது. அதற்குத் தலைவர் மாதுஸ்ரீ, பெஸண்ட் அம்மையார் மஹான்களைத் தேட இச்சைகொண்டு நியாயமான பிரயத்தனம் செய்ய விரும்புவோர்களுக்கு இச்சபையொன்று தற்காலத்திலுள்ளது மிக விசேஷம். அதை ஆதரிக்கவேண்டியது ஒவ்வொரு பக்தனின் கடமை.

40. 𑌲𑌭𑍍𑌯𑌤𑍇𑌽𑌪𑌿 𑌤𑌤𑍍𑌕𑍃𑌪𑌯𑍈𑌵 ॥

அடைந்தாலும் அது ஈசுவர கிருபையே.

41. 𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑌜𑍍𑌜𑌨𑍇 𑌭𑍇𑌦𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 ॥

அவர்களுக்கும் (மஹான்களுக்கும்) அவருக்கும் (ஈசுவர)னுக்கும் (யாதொரு) பேதமும் இன்மையால்.

குறிப்பு:— மலையிலிருந்து வரும் ஒரு சிற்றோடையின் மூலமாக, பெரிய ஏரிநிறையத் தண்ணீரைப் பெருக்கிக்கொண்டு பிறகு பற்பல வயல்களுக்குப் பாய்ச்சுவதுபோலவும் ஈசுவரனுடைய ஓர் கிருபாலேசத்தைக் கொண்டு மஹான்கள் தமது அருள்வெள்ளத்தை உலகிலுள்ள நானா ஜனங்களுக்கும் பிரயோஜனப்படுத்துகிறார்கள். மின் சார சக்தி எல்லா விடத்தும் நிறைந்திருந்தபோதிலும், அச் சக்தியை இயந்திரத்தின் மூலமாக இயக்கிச் சேகரித்துப் பிறகு அச்சக்தி அதனின்றும் பல கிளைகளாகப் பிரிந்து பற்பல

தொழில்களைச் செய்வதுபோல், மஹான்கள் மனிதற்கு ஈஸ்வர கிருபையை வருவித்துக்கொடுக்கிறார்கள். ஆகையால் உண்மையில் மஹான்களுக்கும் ஈசுவரனுக்கும் பேதமில்லை.

42. 𑌤𑌦𑍇𑌵 𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑌾𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑌾𑌂 ॥

அதையே செய். அதையே செய்.

43. 𑌦𑍁𑌃𑌸𑌙𑍍𑌗𑌃 𑌸𑌰𑍍𑌵𑌥𑍈𑌵 𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌃 ॥

எல்லா வழிகளாலும் தீய (பற்றை) ஸஹவாஸத்தை விலக்கவேண்டும்.

குறிப்பு:—மஹான்களுடைய உறவை விரும்புவோர்கள், முதலாவது செய்யவேண்டியது தீய (பற்றுக்களை) ஸஹவாஸத்தை ஒழிக்கவேண்டும். ஏதாவதொரு காரியத்தைச் சாதிக்குமுன் அதன் இடையூறுகளை நீக்கவேண்டும். ஆகையால்தான் தீய (பற்றுக்களை) உறவையொழி என்பது முதல் உபதேசம். ஆனால் இதற்கு "நல்ல உறவை கைக்கொள்" என்பதும் அர்த்தம். பற்றுக பற்றற்றான் பற்றை பற்றுக பற்றுவிடற்கு என்னும் திருக்குறள் வசனம் கவனிக்கத் தக்கது.

44. 𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧 𑌮𑍋𑌹𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑍍𑌰𑌂𑌶
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶 𑌸𑌰𑍍𑌵𑌨𑌾𑌶 𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

காமம், கோபம், மோஹம், மறதி, புத்திநாசம் இன்னும் எல்லா நாசத்திற்கும் காரணமாகையால்,

குறிப்பு:— தீயவர்கள் உறவை ஏன் ஒழிக்கவேண்டுமென்பதற்குக் காரணங் கூறுகிறார். முதலில் தீயவர்கள் நமது ஆசையைத் தூண்டுவார்கள். ஆசைப்படும் பொருள் கிட்டாவிடில் கோபம் உண்டாகிறது. தடித்தனமான ஆசைகள் தன்னலம் பற்றியவைகளாகையால், தன்போன்றவர்களிடத்தில் பொறாமையும், அநீதியான கோபமும், உண்டா

கின்றன. ஒருவன் ஒருதரம் காமவலேக்குள் ளகப்பட்டு, கோபத்திற்கும் உள்ளானுல், அவன் மறுதரம் அதிலேசாய் காமவலேக்குள் ளகப்படுவான். அதிலேசாய் கோபாவேச மடைவான். இவ்வாறு பல முறை காமக்குரோதங்களின் வசப்பட்டானுனல், தன் ஸ்வாதீனத்தை யிழப்பான். அதைத் தான் மோஹம் என்று சொல்வோம். பிறகு புத்தி நசித்துப் போம். புத்தி நசித்தவுடன் எல்லாம் நாசமடையும். தீய வர்களுடைய ஸஹவாசம் மனிதனை எப்படி அதோமுகமாகக் கொண்டுபோய் அழிக்கிறது என்பதைக் கூறிவிட்டார்.

45. தரங்காயிதா அபீமே ஸங்காத் ஸமுத்ராயந்தி ॥

நதிகள்போல் இவை யிருந்தாலும் தீய உறவால்(தன்ன லப்பற்றுல்) ஸமுத்திரம்போல் பெருகுகின்றன.

46. கஸ்தரதி கஸ்தரதி மாயாம் ய: ஸங்காம்ஸ்த்யஜதி ।
யோ மஹாநுபாவம் ஸேவதே நிர்மமோ பவதி ॥

எவன் ஆசைகளை ஒழிக்கிருனே அநுபவம் மிகுந்த மஹாத்மாவை எவன் ஸேவிக்கிருனே எனது என்றும் நினைவை எவன் ஒழிக்கிருனே அவன் தான் மாயையைத்தாண்டுகிருன்

47. யோ விவிக்தஸ்தானம் ஸேவதே யோ லோக
பந்தமுன்மூலயதி நிஸ்த்ரைகுண்யோ
பவதி யோ யோகக்ஷேமம் த்யஜதி ॥

எவன் தனி இடத்தை நாடுகிருனே, எவன் உலகப் பற்றை வேருேடறுக்கிருனே, எவன் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களை ஜயிக்கிருனே, எவன் சோத்து சேர்ப்பதை ஒழிக்கிருனே,

குறிப்பு:- இவ்விதம் யான், எனது என்னும் பற்று நீங் கியவன், உலகத்திலிருந்தபோதிலும் ஏகாந்தமாய்க் காலங் கழிக்கிருன். உலகவலேயில் சிக்குவதில்லே, பிரகிருதியின் குணங்களால்கட்டுப்படாதவனுகிருன். தேடுவதும் அழிப் பதுமாயுள்ள உலகப் போராட்டத்தை முற்றும் தியாகம் செய்கிருன்.

48. ய: கர்மபலம் த்யஜதி கர்மாணி ஸந்ந்யஸ்யதி
ததோ நிர்த்வந்த்வோ பவதி ॥

எவன் கர்மபலத்தை தியாகம் செய்கிருனே, கைம்மாறு கருதாமல் செய்கிருனே, (தனக்கென்னும்) கர்மங்களை எவன் ஒழிக்கிருனே, அதனுல், (ஸுகதுக்கம், லாப நஷ்டம்) முத லிய த்வந்த்வங்கள் நீங்குகின்றனவோ,

49. வேதானபி ஸந்ந்யஸ்யதி கேவலமவிச்சின்னா
நுராகம் லபதே ॥

எவன் வேதங்களைக்கூட தியாகம் செய்கிருனே சுய மான அகண்ட பரிபூரணுனந்தனுகிருனே.

குறிப்பு:—பக்தனுக்கு உலகத்தாலாகவேண்டிய தொன் றும் இனிக்கிடையாது. பக்தனுல் தான் உலகத்திற்கு ஆக வேண்டியது நிரம்பவுள்ளது. ஆகையால் தான், தனக்கு தனது என்ற எண்ணங்களோடு எக்கருமத்தையும் செய்வ தில்லே. ஸக்தா: கர்மண்யவித்வாம்ஸோ யதா குர்வந்தி பா ரத । குர்யாத்வித்வாம்ஸ்ததாஸக்தச்சிகீர்ஷுர் லோக ஸங்க்ரஹம் ॥ என்னும் பகவத்கீதை வசனப்படி "(உலக வாழ்க்கையின் பயனை) யறியாதவர்கள் (பெரு) ஆசை யோடு எப்படி (ஊக்கமாய்) உழைக்கிருர்களோ, அவ்வளவு (ஊக்கமாய்) லோகஸங்கிஹத்தை உத்தேசித்து (உலக வாழ்க் கையின் பயனையறிந்தவர்கள்) உழைப்பார்கள். இந்நிலேயிலுள் ளவர்கள் மஹான்களுடைய ஸங்கத்தில் ஐக்யப்பட்டவர்க ளாய் உலகத்திற்குழைப்பார்கள். நடுவு நிலேமையிலிருந்து கொண்டு சுகதுக்கங்களேயும், புகழ், இகழ் இவைகளேயும் ஒரே மாதிரியான சந்தோஷ சித்தத்தோடு ஏற்றுக்கொள்வார் கள். இத்தகையவர்களே தொந்தங்களே ஜயித்தவர்களாகி ருர்கள். இவர்கள் மஹான்களுடைய முக்கிய அங்கங்களா

கிறபடியால், குருமுகமான உபதேசங்களே இவர்கட்குப் பிரமாணம். தனக்குத்தானே பிரமாணமாக நிற்கிறான். அகண்ட பரிபூரணனந்தமெய்துகிறான். 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌸𑌨𑌾𑌥𑌾𑌃 𑌸𑌾𑌵𑌿𑌨𑍋𑌭𑌵𑌨𑍍𑌤𑌿" என்றபடி அநேக லோகங்களுக்கு சுகத்தையுண்டாக்கக்கூடிய அன்பைப்பெறுகிறான். ஸூர்ய சந்திரர்களைப்போல உலகங்களுக்கெல்லாம் தன் அன்பைப் பாய்ச்சுகிறான்.

50. 𑌸 𑌤𑌰𑌤𑌿 𑌸 𑌤𑌰𑌤𑌿 𑌸 𑌲𑍋𑌕𑌾𑌂𑌸𑍍𑌤𑌾𑌰𑌯𑌤𑌿 ॥

அவன் தாண்டுகிறான், அவன் தாண்டுகிறான், அவன் லோகங்களை உஜ்ஜீவிக்கச்செய்கிறான்.

51. 𑌅𑌨𑌿𑌰𑍍𑌵𑌚𑌨𑍀𑌯𑌂 𑌪𑍍𑌰𑍇𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 ॥

(அவர்களுடைய) அன்பின் ஸ்வரூபம் சொல்ல முடியாதது.

52. 𑌮𑍂𑌕𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑌨𑌵𑌤𑍍 ॥

ஊமை யொருவன் (தான் சாப்பிடும் பதார்த்தத்தின்) ருசியைப் பிறருக்குச் சொல்லமுடியாததுபோல்.

53. 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌯𑌤𑍇 𑌕𑍍𑌵𑌾𑌪𑌿 𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 ॥

பக்தியில் நாட்டமுடைய (அதிகாரி) எவனிடத்திலும் அது பிரகாசிக்கும்.

54. 𑌗𑍁𑌣𑌰𑌹𑌿𑌤𑌂 𑌕𑌾𑌮𑌨𑌾𑌰𑌹𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌷𑌣
𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌮𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑌰𑌮𑌨𑍁𑌭𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 ॥

(ஸத்வரஜஸ்தமோ) குணங்கள் நீங்கியதும், காமனைகளின் கலப்பில்லாததும், க்ஷணம்தோறும் விருத்தியாகிவருவதும் எல்லையற்றதும், எல்லாவற்றிலும் ஸூக்ஷ்மமானதும், அநுபவ ரூபமுமானது.

55. 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌤𑌦𑍇𑌵𑌾𑌵𑌲𑍋𑌕𑌯𑌤𑌿
𑌤𑌦𑍇𑌵 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 𑌤𑌦𑍇𑌵 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌤𑌿 ॥

அதையடைந்து, அதையே பார்க்கிறான், அதையே கேட்கிறான், அதையே சிந்திக்கிறான்.

குறிப்பு:—பக்தியென்பது அநுபவித்தறியவேண்டிய விஷயம். நாவினால் சொல்லி மூளையினால் மட்டும் கிரகிக்கத் தக்க விஷயம் அன்று. பக்தி யென்பது உள்ளக் கனி விருந்தாலொழியப் பிரகாசிக்காது. எத்தனையோ புஷ்பங்களிருந்தாலும், தாமரைபோன்ற சில புஷ்பங்கள் தான் ஸூர்யனைக் கண்டு மலருகின்றன. அதே மாதிரி பக்குவிகளாயிருந்தால் பக்தியானது தடையின்றிப் பிரகாசிக்கும். பக்தியென்பது ஆத்மாவினின்றும் ஊறிவருவதால், அது குணரஹிதம். அது சுயநயமான அன்பு அல்லவாதலால், அது காமனாரஹிதம். அது அவ்யாஜமான உள்ள நிகழ்ச்சியாதலால். யாதொரு ஸ்தூலமான காரணத்தாலும் நிகழ்வதல்ல. ஆகையால் அது ஸூக்ஷ்மதரம், அவ்வானந்தம் ஒருபோதும் குறையாமல் நிமிஷத்திற்கு நிமிஷம் பெருகுகிறபடியால், அது பிரதிக்ஷண வர்த்தமானம். பக்தியை யறியவேண்டுமானால், பக்தியை யநுபவித்தால் தான் முடியும். அதனால் தான் அநுபவரூபம் என்று கூறப்பட்டது.

56. 𑌗𑍌𑌣𑍀 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌗𑍁𑌣𑌭𑍇𑌦𑌾
𑌦𑌾𑌰𑍍𑌤𑌾𑌦𑌿𑌭𑍇𑌦𑌾𑌦𑍍𑌵𑌾 ॥

குணஸம்மிச்ரமான பக்தி, நோயாளி முதலானவர்கள் செய்யும் மூன்று விதங்களாக உள்ளது.

குறிப்பு:—பகவத்கீதையிற் சொல்லப்பட்ட பிரகாரம் வியாதிஸ்தன், ஞானத்தை யிச்சிக்கிறவன், பணத்தை விரும்புகிறவன் இம் மூவரும் முறையே ஸத்வ, ரஜஸ், தமோ மயமான பக்தர்கள்.

57. 𑌉𑌤𑍍𑌤𑌰𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍂𑌰𑍍𑌵𑌾
𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌯 𑌭𑌵𑌤𑌿 ॥

பின்னது ஒவ்வொன்றையும் விட முன்னது ஒவ்வொன்றும் சிரேஷ்டமான பக்தி.

குறிப்பு:— ஐசுவர்யம் பெருகவேண்டுமென்று விரும்பி பக்திசெய்கிறவன் கடைத்தரமான படி, ஏனெனில் இந்நோக்கமுடையவன் பிறர் நலத்தைக் கருதமாட்டான். இவனுக்குக் காமனைகள் அதிகம் உண்டு. ஞானத்தை விரும்பி பக்தி செய்கிறவனுக்கு காமனைகள் சொற்பம் உண்டு. வியாதிஸ்தன் கடவுளைத்தவிர வேறு சரணமில்லையென்ற நினைப்புடன் பக்தி செய்வான்.

58. 𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑍌𑌲𑌭𑍍𑌯𑌂 𑌭𑌕𑍍𑌤𑍌 ॥

பக்திமார்க்கத்தின் மூலமாய் ஈசுவரனையடைவது மற்ற மார்க்கங்களைக்காட்டிலும் சுலபம்.

59. 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑍍𑌯𑌾𑌨𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌾𑌤𑍍
𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

வேறு பிரமாணம் வேண்டியதில்லை யாகையாலும் அதுவே பிரமாணமாயிருத்தலானும்.

60. 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌾𑌤𑍍 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌾𑌚𑍍𑌚 ॥

சாந்தி ரூபமாயும் பரமானந்த ரூபமாயும் இருத்தலாலும்.

61. 𑌲𑍋𑌕𑌹𑌾𑌨𑍌 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾 𑌨 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾
𑌨𑌿𑌵𑍇𑌦𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌲𑍋𑌕𑌵𑍇𑌦𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

தன்னையும், உலகத்தையும், வேதங்களையும் (ஈசுவரனிடத்தில்) நிவேதனம் செய்தமையால், உலகத்திற்கு தீங்கு நினைக்கலாகாது.

...— ஈசுவர ஸங்கல்பத்தோடு ஐக்கியப்பட்ட பக்தன் உலக நாசத்தை [illegible]னம் கருதுவான் !

210806

“ தியஸாபிகல் ஸொஸைட்டி ”

என்னும்

பிரம்மஞான ஸபை.

இஃது 1875-௵ நவம்பர்-மீ 17உ அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் ஏற்பட்டு, சென்னை அடையாற்றில் இப்போது நிலை பெற்றிருக்கிறது. ஸமரஸ புத்தியோடு தத்துவ ஆராய்ச்சிக்கு ஒன்று சேருகிறவர்களின் சங்கம் இது. ஆதலால் இச்சங்கத்தார் நாஸ்திகத்தைக் கண்டித்து, ஆஸ்திக புத்தியை வளர்த்து, மனித வர்க்கத்திற்கு ஞானவழியில் உபகரிப்பவராவர். இதன் முக்கிய கொள்கைகள் மூன்று:—

(1) ஜாதி, மதம், வர்ணம், வகுப்பு, ஆண், பெண் இப்பேதங்களின்றி, ஸர்வஜன ஸகோதர பாவம் நிலைபெறச் சாதகமாயிருத்தல்.

(2) வெவ்வேறான மதம், தத்துவ சாஸ்திரம், பௌதிக சாஸ்திரங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்வதை ஆதரித்தல்.

(3) மனிதனிடத் தடங்கியுள்ள சக்திகளையும் நமக்கு விவரந் தெரியவராத பிரபஞ்ச நியதிகளையும் பரிசீலனைந் செய்வது.

இச்சபையில் சேருகிறவர்கள் எம்மதத்தினராகவும் அல்லது ஒரு மதத்தையும் சேராதவராகவும் இருக்கலாம். ஆனால் மேற் கண்ட நோக்கங்களை ஒப்புக்கொள்ள வேண்டும். மதத் துவேஷங்களை ஒழித்து நல்லெண்ணமுள்ளவர்களா யிருந்துகொண்டு தங்கள் மத அபிப்பிராயங்கள் எப்படி யிருப்பினும் மதவுண்மைகளைப் படித்து மற்றவர்களோடு தங்கள் படிப்பைக் கலந்து கொள்ள விரும்பும் படி[illegible]ிகள் இச்சங்கத்தில் ஒருங்கு சேருகிறார்கள். அவர்கள் [illegible]மக்கு ஓரே பொது நம்பிக்கை காரணமன்று. தத்து[illegible] கண்டறியும் ஓரே லக்ஷியத்தோடு அவர்கள் ஒருங்கே[illegible]பதுதான் காரணம்.

விலை நயம்! நல்ல மல்!!

கலர் சேலைகள்!

நல்ல தவாலிடி! சாயம் காரண்டி!!

ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் தினப்படி உபயோகிக்க ஒவ்வொரு குடும்பத்துக்கும் மிகவும் உபயோகமானது.

எங்களிடம் பச்சை, கெம்பு, பொடி, நீலம், கருப்பு, ஊதா. ஆரஞ்சு, ரோஸ், காகி, ஆலிவ்கிரீன், சிமிட்டு கலர்கள் தயாராகிறது, மேல்கண்டவை ரொம்ப கப்பாகவும் கூட அவரவர்கள் விருப்பப்படி தயார் செய்து கொடுக்கலாம். ஒரு உரும்படிக்கு $\frac{1}{2}$ கெஜம் முதல் 11 கெஜம் வரையில் கிடைக்கும்.

பாவாடை, சித்தாடை, தாவணி, ரவிக்கை கெஜம், 2, $2\frac{1}{4}$, $2\frac{1}{2}$, $2\frac{3}{4}$, அகலங்களில் எவ்வளவு நீளத்திலும் கிடைக்கும். மேல் கண்டவைகள் சாயம் போனால் வாங்கின தேதிமுதல் இரண்டு மாதத்துக்குள் அனுப்பிவிட்டால் மறு சாயம் இனாமாய் போட்டு பார்சல் செலவும் அனுப்பிவிடுகிறோம்.

நாங்கள் இதர சேலைகளும் பட்டுகளும் நூல்களும் வியாபாரிகளுக்கும் சில்லரைக்கும் நயமாய் காரண்டி சாயம் போட்டுக் கொடுக்கிறோம்.

கமிஷன் ஏஜண்டுகள் தேவை, நல்ல கமிஷன் கிடைக்கும். ஒரு அணா ஸ்டாம்பு வைத்து அனுப்பினால் காட்லாக்கும் சாம்பிளும் இனாமாய் அனுப்பப்படும்.

40" 8 கெஜம் சித்தாடை 1க்கு 4-8-0 Net 4-8-0.
44" 9 கெஜம் சேலை 1க்கு 6-0-0 Net 6-0-0.
50" $9\frac{1}{2}$ கெஜம் சேலை 1க்கு 7-8-0 Net 7-8-0.
அசல் 703 மல்லில் போட்டது $9\frac{1}{2}$ கெஜம் சேலை 1க்கு 10-8-0
44" ஜப்பான் மல்லில் போட்டது 9 கெஜம் Net 5-0-0.

N. B ஒவ்வொரு ஆர்டரும் (நீளம் முழம்) (அகலம் இஞ்சு) கலர் $\frac{1}{2}$ கப்பு, $\frac{3}{4}$ கப்பு, முழு கப்பு, விபரமான அட்ரஸ் ரயில் அல்லது போஸ்டு பார்சல் தெளிவாய் எழுதி 4ல் ஒருபாகம் அட்வான்ஸ் அனுப்பவேண்டியது.

V. P. சார்ஜ் பிரத்

O. V. கோபாலவ . . . யர்,
ஸ்ரீ வேணுகோபால் டை . . . ர்க்ஸ்,
299, தம்பு . . . தெரு,
. . . ஐ . . . மதராஸ்.